பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 தை 02 வியாழக்கிழமை (15.01.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:050

## விடுதலைப் புலிகளின் தலைவரைப் பிடித்து

# பயங்கரவாதத்தை ஒழிக்கும் வரை

# போர் தொடர்ந்து நடத்தப்படும்

## பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய சூளுரை

கொழும்பு,ஜனவரி15



விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பிடித்து, பயங்கரவாதத்தை பூண்டோடு ஒழித்துக்கட்டும் வரைக்கும், எமது யுத்தம் தொடர்ந்து நடத்தப்படும்.

இவ்வாறு சூளுரைத்துள்ளார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ.

இறுதிவரை பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவது என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம். படையினருக்கும் இந்த நோக்கத்தின் முக்கியத்துவத்தை விளக்கி உள்ளோம் - என்றும் அவர் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

ரூபவாகினி தொலைக்காட்சிக்கு நேற்றிரவு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

அந்தப் பேட்டி ஏனைய அரச தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பப்பட்டன. அரச வானொலிகளும் அதனை ஒலிபரப்புச் செய்தன.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தமது ஒன்றரை மணி நேரப் பேட்டியில் தெரிவித்தவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

தற்போது இந்த நாட்டுக்குக் கிடைத்திருக்கும் யுத்த வெற்றிக்கு வீரமிக்க படையினரும்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கை முடிவுக்கு வருகிறது
## 10 ஆம் திகதிக்கு முன் எஸ்.எம்.எஸ்ஸில் அறிவிப்பு வரும்

### ஆனைமடுக் கூட்டத்தில் பிரதமர்



கொழும்பு,ஜன.15

அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகள் குறுகிய காலத்திற்குள் நிறைவடைந்து விடும். அது சம்பந்தமான அறிவிப்பை மக்கள் எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்னர் எதிர்பார்க்கலாம். அதனை நீங்கள் அவசர குறும் செய்திகள் (எஸ்.எம்.எஸ்) மூலம் அறிந்து கொள்ள முடியும்

இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் ரட்ணசிறி விக்கரமநாயக்க.

ஆனைமடுவில் நடைபெற்ற ஐக் கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர் தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு, கைவேலிப் பகுதியில் பீரங்கித்தாக்குதல்; 13 பேர் படுகாயம்!

கொழும்பு, ஜன. 15

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, கைவேலிப்பகுதி மீது நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் வயோதிபர் மற்றும் பெண்கள் உட்பட 13 பேர் படுகாயமடைந்தனர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# உலகத் தமிழினம் ஓரணியில் திரளவேண்டிய தருணம் இது!

## உண்ணாவிரதத்தில் குதிக்க முன் திருமாவளவன் உதயனுக்குப் பேட்டி

சென்னை, ஜன.15

"இலங்கையில் அழிவை எதிர்கொண்டு ஆபத்தில் சிக்கியிருக்கும் ஈழத் தமிழ் மக்களைக் காப்பதற்காக உலகத் தமிழர்கள் எல்லோரும் ஓரணியில் திரளவேண்டிய தருணம் இது. அந்த ஐக்கிய எழுச்சியை உருவாக்குவதற்காகவே நான் இந்த உண்ணா விரதப் போராட்டத்தில் குதிக்கவுள்ளேன்.'' - விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல். திருமாவளவன் தமது சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் இன்று குதிப்பதற்கு முன்னர் நேற்று மாலை 'உதயனு'க்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



இலங்கையில் இனவெறிப் போரை நிறுத்துமாறும், அமைதிப்பேச்சை உடன்ஆரம்பிக்குமாறும் இலங்கை அரசை இந்திய மத்திய அரசு வலியுறுத்த வேண்டும்.

உலகத் தமிழினம் ஒன்றுபட்டு,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் அனுமதி கிடைக்காததால் திருமாவளவனின் உண்ணாவிரதம் நேற்று இல்லை; இன்றே ஆரம்பம்

சென்னை, ஜன.15

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக நேற்று ஆரம்பிக்கவிருந்த சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் இன்று வரை ஒத்திவைத்துள்ளார்.

பொலிஸாரின் அனுமதி கிடைக்காததை அடுத்து நேற்றுப் போராட்டம் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் -

இன்று தாம் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்குவார் என்றும் திருமாவளவன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுண்டிக்குளம் படை வசம்

கொழும்பு, ஜன.15

கிளிநொச்சியில் உள்ள சுண்டிக்குளம் பகுதியை இராணுவத்தினர் கைப்பற்றியுள் ளதன் மூலம் யாழ்.குடாநாடு முழுமையாக படை வசமாகியிருக்கிறது - என்று பாதுகாப்பு அமைச்சுத் அறிவித்திருக்கின்றது.

இந்தப் பகுதியை நேற்றுமாலை இராணுவத்தினர் முழுமையாகத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்துள்ளனர் என்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களைக் காக்க இனியும் தவறினால்

# இந்தியாவின் துரோகத்தை தமிழர்கள் ஒருபோதும் மன்னிக்கவே மாட்டார்கள்

### மன்மோகனுக்கு வைகோ அவசரக் கடிதம்

சென்னை, ஜன.15

மரணப் பள்ளத்தாக்கில் பரிதவிக்கும் முல்லைத்தீவு மக்களை காப்பாற்றுமாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத் தின் பொதுச் செயலாளர் வைகோ வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மன்மோகன் சிங்குக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வைகோ அனுப்பிய அவசரக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இன்றைக்கு 6 லட்சம் ஈழத்தமிழர்கள் முல்லைத்தீவில் மரணப் பள்ளத்தாக்கில் தவிக்கின்றனர். ஸ்ரீலங்கா இராணுவம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 42 புதிய வைத்தியர்கள் வடக்கு, கிழக்குக்கு நியமனம்

கொழும்பு,ஜன. 15

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சேவையாற்றுவதற்கென 48 புதிய வைத்திய அதிகாரிகளை அரசு நியமனம் செய்துள்ளது.


- இவ்வாறு சுகாதாரம் மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர்கள் இவ்வாரம் முதல் தமது சேவை

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னைப் பகிர்ந்து அன்பைப் பெறுவோம்



தற்போது எங்கு பார்த்தாலும் வெறுப்பு பரவி நிற்கிறது. அன்பென்பதே காணப்படுவதில்லை. அன்பிருக்கும் இடம் ஆன்மீக இதயம். அது மனித உடலின் வலப்பக்கத்தில் இருக்கிறது. இதனைப் புரிந்து கொள்ள எவரும் முயற்சிகூட எடுப்பதில்லை. அன்பே காணாமல் போய்விட்டால், ஒற்றுமை என்பதும் காணப்படுவதில்லை. ஒற்றுமை இல்லாத இடத்தில், தூய்மையும் இருக்காது. தெய்வத்துவத்தையும் உணர இயலாது. தற்போது மக்கள், ஒருவருக்கொருவர் விரோதம் பாராட்டுவதையும், குறுகிய சாதி, இன மனப்போக்குகளை வளர்த்துக் கொள்வதையும்தான் செய்து வருகின்றனர். அன்பிருக்கும்போது, ஜாதி, மதம், இனம், இவையெல்லாம் மறைந்து போகும். விரோதம் மறையும். சிலர் மற்றவரைப் பார்த்து 'ஹலோ' என்று சொல்வதும்கூட செயற்கையாக இருக்கிறது. மேம்போக்காக இருக்கிறதே தவிர, இதயத்திலிருந்து வருவதாகக் காணோம்.

அன்பைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமானால், அன்பைப் பகிர்ந்து கொண்டு அனைவருக்கும் சேவை செய்து நண்பர்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

## சாயி சிந்தனை

## யாழ்.பேராலயத்தில் பொங்கல் திருப்பலி

குருநகர், ஜன.15

யாழ்.மரியன்னை பேராலயத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற திருப்பலி, பொங்கல் நாள் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது. இத்திருப்பலியை வண.பிதா சில்வெஸ்ரர் அடிகளார் நிறைவேற்றினார். இத்திருப்பலியில் அவருக்கு உதவியாக இறை பணி புரிந்த பீடப் பணியாளர்கள் அனைவரும் வேட்டி, சேட் மற்றும் சால்வையுடன் கலந்து கொண்டனர். இத்திருப்பலி நிறைவில் யாழ். மரியன்னை பேராலய முகப்பு முன்பாக பொங்கலும் இடம்பெற்றது. (1-51)

# மரண அறிவித்தல்கள்

## தாமோதரம்பிள்ளை சொக்கலிங்கம்



நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை சொக்கலிங்கம் நேற்று முன்தினம் (13.01.2009) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - செல்லமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஸ்ரீகரனின் (லண்டன்) பாசமிகு தந்தையும் வசந்தியின் (லண்டன்) அன்பு மாமனாரும் சக்தி, சந்தோஸ் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தமூர்த்தி, நாகேஸ்வரி, குணம் மற்றும் குலசேகரம்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் ஆனந்தநடராசா (ஓய்வுபெற்ற நீதிமன்றப் பதிவாளர்), நல்லைநாதன் (ஓய்வுபெற்ற எழுதுநர்), பத்மாவதி, நவமணி (ஓய்வுபெற்ற தாதி), Dr.ரகுநாதன் (லண்டன்), கதிர்காமத்தம்பி (நீர்ப்பாசன உத்தியோகத்தர், திருகோணமலை), புனிதவதி, Dr.வைகுந்தவாசன் (கொழும்பு), பரமஞானம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2009) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாரந்தனை வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ஸ்ரீகரன் (மகன்), சூரியகாந்தன் (பேரமகன்) (ஆசிரியர், வேலணை மத்திய கல்லூரி).

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை. (81854)

## டான் போத் அரியரட்ணம் பாலச்சந்திரன்

**(Retd. People's Bank Regional Officer, J.P.)**

உடுவில், டச்சு வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட டான் போத் அரியரட்ணம் பாலச்சந்திரன் 12.01.2009 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி யோசப் ஸ்ரீபன் டான் போத் அரியரட்ணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நவரட்ணம் Hunt தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திருமதி இ.மகிமாவதியின் அன்புச் சகோதரனும் ரேஜினா ரோசம்மாவின் அன்புக் கணவரும் ஜீவபாலன் (Senior Executive, Colombo), சந்திரிக்கா (ஆசிரியர்), ரெபேகா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் நிவேதித்தா (Psychologist, Colombo), வசந்தகுமார் ஆகியோரின் மாமனாரும், திருமதி சோமசுந்தரம் (Swiss), செல்வநாயகம்Hunt (Colombo), குணராஜா Hunt (Canada), செல்வராஜா Hunt (Ex Co - ordinator, Jaffna), காலஞ்சென்ற ஜெயராஜா Hunt (Germany), செல்வி மகிழம்மா நவரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை உடுவில் டான் போத் இல்லம், டச்சு வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (15.01.2009) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு CSI உடுவில் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

டான் போத் இல்லம்,
டச்சு வீதி, உடுவில். (81888)


## புதுவருட நல்வாழ்த்துக்கள்

**மீண்டும் 03.01.2009 முதல்**

**கைதடிச் சந்தையில்**

அன்பர்கள், வாடிக்கையாளர்களின் நலன் கருதி நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் எமது ஆட்டிறைச்சிக்கடை திறக்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திறக்கும் நாள்கள்: சனி, ஞாயிறு, புதன்
விசேட தினங்களும் திறக்கப்படும்.

உரிமையாளர் M.S.M.றகுமத்துல்லா
(முன்னைய உரிமையாளர்) கைதடிச் சந்தை.


## நல்லூரில் நாளை பட்டிப் பொங்கல்

யாழ்ப்பாணம், ஜன.15

ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தான பால சம்ரட்ஷண சமூக நலனோன்பு மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் பட்டிப்பொங்கல் விழா நாளை வெள்ளிக்கிழமை நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ள பட்டிப்பொங்கல் நிகழ்வை முன்னிட்டு பண்டாரக்குளம் பிள்ளையார் கோயிலில் இருந்து பசுக்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படவுள்ளன.

கோமாதா பொங்கல் வழிபாட்டில் பிரதம விருந்தினராக நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் சோமசுந்தரபராமாச்சாரிய சுவாமிகள் கலந்துகொள்வார். கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (202-11)

## விவேகானந்தர் ஜெயந்திவிழா

யாழ்ப்பாணம், ஜன.15

தாவடி, கொக்குவில் ஸ்ரீ இராமகிஷ்ண சமிதியினர் சுவாமி விவேகானந்தரின் 147 ஆவது ஜெயந்தி விழாவையொட்டி நிகழ்வுகளை நடத்தவுள்ளனர்.

நிகழ்வுகள் வரிசையில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தேசிய இளைஞர் தின நிகழ்வு சரசாலை பிரதேச சபை நூல் நிலையத்தில் நடைபெறவுள்ளது. (201)

## திருமந்திரம் முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன.15

அகில இலங்கைத் திருமுறை மன்றம் திருவாவடுதுறை ஆதீனம் அன்பளிப்பாக வழங்கிய நாயன்மார் நால்வரது சிலைகளை ஆலயங்கள் தோறும் எழுந்தருளச் செய்து ஈழத்திருநாட்டில் சாந்தி, சமாதானம், யுத்தமின்மை வேண்டி யாழ். குடாநாட்டு ஆலயங்களில் பன்னிரு திருமுறை முழுவதும் முற்றோதி வருகின்றது.

இதற்கமைய யாழ்ப்பாணம், பலாலி வீதி, கந்தர்மடம் இந்துசமயப் பேரவை ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயிலில் பத்தாந் திருமுறை திருமந்திரம் முற்றோதல் நேற்று ஆரம்பமாகி தினமும் காலை 7.30 மணி முதல் ஆலயப் பூசையைத் தொடர்ந்து நடைபெறுகிறது. (1)

## வாக்காளர் இடாப்பு பார்வைக்கு

சித்தங்கேணி, ஜன.15

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் இடாப்பின் திருத்தம் தொடர்பான விண்ணப்பங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வாக்காளர் நிரல்கள் (ஏ,பி) மற்றும் நடைமுறை வாக்காளர் இடாப்பு என்பன கடந்த முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை வரை வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திலும் உரிய கிராம சேவையாளர் அலுவலகங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இவை தொடர்பான ஆட்சேபனைகள், உரிமைக்கோரிக்கைகள் ஏதாவது இருப்பின் இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் உரிய விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு வலி.தெற்மேற்கு சண்டிலிப்பாய் [illegible] அறிவித்துள்ளார். (201-112)

# கண்ணீர் அஞ்சலி



கல்வியே மூலதனமாய், கருப்பெற்று - உன்
கனவுகள் நிஜமாகி கனிந்து வரும் வேளை
கற்றவரும், உற்றவரும், பெற்றவரும்
உறவுகளும்
கலங்கிக் கதறிட காவியமாகி
விட்டது மேனோ?

**செல்வி தேவராஜா சாளினி (சாளி)**

உன் பிரிவால் துயரின் அரவணைப்பில்
A.ஆனந்தராஜா குடும்பம் (சித்தப்பா)
ஆனந் பான்சி, கொடிகாமம்.
பெர்னா, அமிர்தா (சித்திமார்)

கச்சாய் வீதி,
கொடிகாமம். (81855)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 05 ★ 07 ★ 1924 | 16 ★ 12 ★ 2008 |

## அமரர் அப்புத்துரை வள்ளிப்பிள்ளை

ஆறுதல் சொல்ல யார் இருந்தென்ன உங்கள்
ஆருயிர் அன்புக்கு ஈடாகுமோ
தேறுதல் சொல்ல தெய்வமே வந்தாலும் உங்கள்
திருமுகம் ஒருதரம் காண்பதற்கு ஈடாகுமா
நீங்காது உங்கள் நினைவுகள்
நிலையாக எம் மனதில் வாழ்கின்றன
ஆத்மா சாந்திபெற அனுதினமும் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

இல.7, பென்ரிக்கோஸ் லேன்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

மகேந்திரன் சந்திரமாலா
(மருமகன், மகள்).

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசையா கண்மணி

தச்சந்தோப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா கண்மணி நேற்று (14.01.2009) புதன் கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் பூபதி, பரமேஸ்வரி, ஜெகதீஸ்வரன், யோகேஸ்வரன், யோகாம்பிகை, சிவனேஸ்வரன் (சிவா) ஆகியோரின் அன்புத் தாயும் கந்தசாமி, பாலசிங்கம், வசந்தராணி, பேபிசறோஜா, மகாலிங்கம், சாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2009) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாவற்குழி கிழக்கு பிணமுருங்கை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சிவனேஸ்வரன் (மகன் - சிவா).

தச்சந்தோப்பு,
கைதடி. (81853)

## கணபதிப்பிள்ளை தம்பிராசா

இன்பர்சிட்டி, பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை தம்பிராசா நேற்று (14.01.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் நற்குணம் - நாசகப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் நவமணியின் அன்புக் கணவரும் சந்திரதாஸ் (தலைவர், பரு.ப.நோ.கூ.சங்கம்), சித்திரா, தேவதாஸ் (சுவிஸ்), சுபத்திரா, அன்னலட்சுமி, சிவதாஸ், நாகேஸ்வரி மகேஸ்வரி ஆகியோரின் தகப்பனாரும் சூரியகுமாரன், காலஞ்சென்ற அமிர்தலக்ஷ்மி, றஞ்சினிதேவி, ஜெயமனோகரி, ஆனந்தவேல், கனகசபானந்தன், மாலினி, தயானந்தன் ஆகியோரின் மாமனும் தாட்சாயினி, கலையமுதன், சத்தியசாயினி, கலையரசி, தமிழமுதன், தமிழரசி, சாமந்தி, லக்ஷ்மணதாஸ் (உதயன் பத்திரிகை), தமயந்தி, கௌசி, கௌசிகாந்த், கௌதமி, கௌரீசன், கவிஜா, மதுஜா, கதூசன், றஜீவன், நிறோசா, பவித்திரா, நிகல்மாலா, தனுஷன், மனோஜ்பிரபாகர், சுமித்திரா, வினோஜன், பானுஜன், ஜனுசன் ஆகியோரின் பேரனும் அபிநயா, கவிநயா ஆகியேரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2009) வியாழக்கிழமை மு.ப. 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: த.சந்திரதாஸ் (மகன்).

இன்பர்சிட்டி,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அடிப்படை உரிமை மீறலுக்கு நிவாரணம் இல்லாத தேசம் இது!

எரிபொருள் விலை விவகாரத்தை ஒட்டி உயர்நீதி மன்றம் வழங்கிய உத்தரவை அரசும், நிறைவேற்று அதிகாரமும் உதாசீனப்படுத்தி, புறக்கணித்த விவகாரம் புதிய விளைவுகளைத் தந்திருக்கின்றது. இந்த விடயத்தை ஒட்டி சர்வதேசம் அவதானிக்க வேண்டிய ஒரு முக்கிய விடயம் இங்கு உருவாகியிருக்கின்றது.

இந்தப் பூமிப் பந்தில் வாழும் ஒவ்வொரு மனிதனினதும் அடிப்படை உரிமைகள் குறித்து உலகம் சிரத்தை எடுத்துக் கவனித்து, சிலாகித்துப் பேசும் காலம் இது. உலகின் எங்கோ ஒரு மூலையில், யாரோ ஒருவனின் அடிப்படை உரிமை மீறப்படுவதைக் கூடப் பொறுத்துக்கொள்ள முடியாது என்ற கணக்கில் சர்வதேசம் பிரதிபலிப்பைக் காட்டும் வேளை இது. உலக ஒழுங்கு அவ்வளவு சிரத்தையாக இருக்கின்றது.

இறைமையுள்ள - சட்ட ரீதியான - அரசுகள் என்று கூறிக்கொள்ளும் தேசக்கட்டமைப்புகள் அனைத்தும் தத்தமது பிரஜை ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமைகளைப் பேணிப் பாதுகாத்து உறுதி செய்வது கட்டாயமானது என்று சர்வதேசங்களும் சேர்ந்தே வலியுறுத்துகின்றன.

சர்வதேச ரீதியில் உருவாக்கப்பட்ட பட்டயங்களும், பிரகடனங்களும் இதனை வலியுறுத்தி நிற்கின்றன. இந்தப் பூகோளப் பந்தின் ஒவ்வொரு மனித உயிரினதும் அடிப்படை உரிமைகள் பேணப்படுகின்றனவா என்பதை மோந்து பார்த்து, கண்டு அறிவதற்காக ஐ.நா. கட்டமைப்புகளில் இருந்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் வரை பல்வேறு சர்வதேச, பிராந்திய, பிரதேச அமைப்புகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. சதா உலகை உன்னிப்பாக அவை கவனித்துக்கொண்டிருக்கின்றன.

அத்தகைய விசேட கவனிப்புக்கு உள்ளாகும் தேசங்களுள் ஒன்று இலங்கை,

தனது தேசத்தின் ஒவ்வொரு பிரஜையினதும் அடிப்படை மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பான தனது கடப்பாட்டை நிறைவு செய்வதாகக் கூறிக்கொள்ளும் இலங்கை, அது தொடர்பான பல சர்வதேசப் பிரகடனங்கள், ஆணைகள், பட்டயங்களில் ஒப்பமிட்டு அவற்றை ஏற்றுக்கொண்டுமிருக்கின்றது.

அதுமட்டுமல்ல. இலங்கைத் தீவின் பிரஜைகளின் அடிப்படை உரிமைகளைப் பேணுவதற்கான சரியான - நேர்த்தியான - சட்டக் கட்டமைப்புப் பொறிமுறை ஒன்றை, ஒழுங் காகத் தான் அரசமைப்பு ஊடாக உறுதி செய்து தன்வசம் கொண்டிருப்பதாகவும் இலங்கை காட்டிக் கொள்கின்றது.

அந்த ஏற்பாட்டில் ஒரு பெரிய ஓட்டை - பின்னடைவு - இருப்பதைத்தான் பெற்றோல் விலை தொடர்பான வழக்கின் போக்கு சர்வதேசத்துக்கு அம்பலப்படுத்தியிருக்கின்றது.

பிரஜை ஒருவரின் அடிப்படை உரிமை மீறப்படுமானால் அதற்கான சட்ட ரீதியான நிவாரணத்தை அந்தப் பிரஜை உயர் நீதிமன்றத்திடமே - உயர்நீதிமன்றத்திடம் மட்டுமே - பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அரசமைப்பின் 126 ஆவது பிரிவு தெளிவாக விளக்கிக் கூறியிருக்கின்றது.

அரசினால் அல்லது அதன் அங்கத்தினால் அல்லது நிறைவேற்று அதிகாரத்தால் அல்லது வேறு நபர்களினால் ஒருவரின் அடிப்படை உரிமை மீறப்படுமாயின் அவர் இலங்கையின் உச்ச - உயர் - நியாயாதிக்கமுடைய உயர்நீதிமன்றத்திடம் நேரடியாக முறையீடு செய்து தகுந்த நிவாரணம் பெற்றுக்கொள்ள முடியும் என்பதே இலங்கையில் அடிப்படை உரிமை மீறலில் இருந்து ஒவ்வொரு பிரஜையையும் பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடாகும்.

இந்த சட்ட ஒழுங்கு முறையை, அதை நடைமுறைப் படுத்த வேண்டிய பொறுப்பும் கடப்பாடும் உடைய அரசே வேண்டும் என்றே - வெளிப்படையாகவே - மீறிப் புறம் ஒதுக்கும் மோசமான நிலைமை இலங்கையில் ஏற்பட்டிருப்பது அதிர்ச்சிக்கும் அதிசயத்துக்கும் உரியதாகும்.

பெற்றோல் விலை விவகாரத்தில் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று தெரிவித்தே முக்கிய பிரஜைகள் மேற்படி அடிப்படை உரிமை மீறல் மனுக்களை அரசமைப்பின் 126 ஆவது பிரிவின் கீழ் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிவாரணம் கோரியிருந்தனர்.

அந்த மனுக்களில் உள்ள விடயங்களைப் பரிசீலித்து - அதில் உள்ள நியாயங்கள் மற்றும் பாதிப்புகள் பற்றிய விடயங்களைக் கவனத்தில் எடுத்து உயர்நீதிமன்றம் சில உத்தரவுகளை வெளியிட்டது.

'ஹெட்ஜிங்' ஒப்பந்தம் என்ற ஏற்பாட்டின் கீழ் பல்லாயிரம் கோடி ரூபா அரச நிதி வெளி வங்கிகளுக்குக் கொட்டிக் கொடுக்கப்பட்டு வீணடிக்கப்படுவதைக் கண்டுபிடித்த உயர்நீதிமன்றம் அந்தக் கொடுப்பனவுகளை இடைநிறுத்தி உத்தரவிட்டது. அந்தப் பணிப்புரை தனக்கு 'வாசி'யாக அமைந்ததால், அதைக் 'கப்'பெனப் பிடித்துக் கொண்டு நடைமுறைப்படுத்தியது அரசு.

ஆனால் அதே வழக்கை ஒட்டி, பெற்றோலின் விலையை சாதாரண மக்களுக்கு நியாயம் கிட்டும் விதத்தில் லீற்றர் நூறு ரூபாவாக விற்கும்படி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதும் அதை நிராகரித்து, புறக்கணித்து, உயர்நீதிமன்றை அவமதிக்கும் விதத்தில் அதன் இந்த உத்தரவை உதாசீனப்படுத்தி, அமைச்சரவையும், நிறைவேற்று அதிகாரமும் நடந்துகொள்ள முயல்கின்றன.

அரசே! நிறைவேற்று அதிகாரத்தைப் பிரயோகிக்கும் ஜனாதிபதி அவர்களே!!

இது அடிப்படை உரிமை மீறல் தொடர்பான விண்ணப்பத்தை ஒட்டிய உயர்நீதிமன்ற உத்தரவு என்பதையும், அடிப்படை உரிமை மீறல்களுக்கு நீதியும், நிவாரணமும் பெற்றுத் தரும் சட்ட அதிகாரம் கொண்ட ஒரேயொரு கட்டமைப்பான உயர்நீதிமன்றத்தின் பணிப்புரை என்பதையும் மறந்து விடாதீர்கள்.....!

இதை நீங்கள் புறக்கணித்தால் -

இந்தத் தேசத்தில் அரசும், நிறைவேற்று அதிகாரமும் தமது தத்துவங்களையும் செயல் அதிகாரங்களையும் எல்லை மற்றும் வரம்பு மீறிப் பிரயோகித்து தனிப்பட்ட பிரஜைகளின் அடிப்படை உரிமைகளை மீறும் போது அதற்கு எதிராக சட்ட நிவாரணம் பெறும் ஒழுங்கமைப்பு இத் தேசத்தில் இல்லை அல்லது அந்த ஏற்பாடு செயலிழந்து போய் விட்டது என்றாகிவிடும் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான சட்ட மற்றும் ஒழுங்கு விதிகளை உரியமுறையில் நடைமுறைப் படுத்தி, செயற்படுத்த இயலாத ஒரு தேசத்தில் சட்டமே இல்லை என்றாகி விடும் எனப் பிரதம நீதியரசர் உயர்நீதிமன்றத்தில் பகிரங்கமாகக் கூறிய எச்சரிக்கையை சம்பந்தப்பட்டோர் கவனத்தில் கொள்வது அவசியம்.

# வன்னியில் போரை உடனடியாக நிறுத்தக் கோரி நோர்வே தமிழ் மக்கள் கவன ஈர்ப்புப் போராட்டம்

## ஹன்சன் பௌவரிடம் மகஜர் கையளிப்பு

ஒஸ்லோ, ஜன.15

வன்னிப் பகுதியில் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களைக் கண்டித்தும் உடனடியாகப் போரை நிறுத்துமாறு கோரியும் நோர்வே தமிழ் மக்கள் கவன ஈர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

நோர்வே வெளியுறவு அமைச்சுக்கு முன்பாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி முதல் 3 மணிவரை இந்தப் போராட்டம் நடைபெற்றது.

நோர்வேயில் வாழும் தமிழ் மக்கள், தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப்பலர் அதில் கலந்துகொண் டனர்.

கவனயீர்ப்பில் ஈடுபட்ட மக்கள், உடனடி போர் நிறுத்தம் ஏற்படுத்தப்படவேண்டும்; தமிழ் மக்கள் மீதான படுகொலை நிறுத்தப்பட வேண்டும். இதன் தார் மீகப் பொறுப்பு சமாதான முயற்சியில் ஈடுபட்ட நோர்வேக்கு உண்டு போன்ற முழக்கங்களை எழுப்பியதோடு பதாகைகளையும் தாங்கி நின்றனர்.

கவனயீர்ப்பின் இறுதியில் சமாதான சிறப்புத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌவரிடம் போரை நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தப்பட்ட மகஜர் ஒன்றை நோர்வே தமிழ் அமைப் புக்களின் ஒன்றியம் கையளித்தது.

(202)




# வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் இருந்து இதுவரை 984 பேர் கொடிகாமம் வந்தனர்

யாழ்ப்பாணம், ஜன.15

வடமராட்சி கிழக்குப் பகுதியிலிருந்து நேற்று புதன்கிழமை காலை வரை 984 பேர் இடம்பெயர்ந்து கொடிகாமத்துக்கு வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு மட்டும் 400 பேர் இடம்பெயர்ந்து கொடிகாமத்தை வந்தடைந்துள்ளனர்.

இவர்கள் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும் அதனை அண்டிய வீடுகளிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் தேவையான உணவு வசதிகளை தென்மராட்சிப் பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகின்றது. ஏனைய அத்தியாவசியப் பொருள்களைத் தென்மராட்சி லயன்ஸ் கழகத்தினர் வழங்கி வருகின்றனர்.

மருத்துவ வசதிகளைக் கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை வழங்கி வருகின்றது.

இடம்பெயந்த மக்களுக்கு உதவி புரிய விரும்பும் பொது நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரைத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு தென்மராட்சி லயன்ஸ் கழகச் செயலாளர் ஆ.ச.செந்தூரன் கேட்டுள்ளார். (202-207)

# காரைநகரில் கடற்றொழிலாளர் நலன்கருதி பல்வேறு திட்டங்கள் நாளை அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஜன.15

காரைநகரில் கடற்றொழிலாளர்களின் நலன்கருதி அமைக்கப்பட்ட பல நோக்கு மண்டபம், படகு இயந்திரம் திருத்தும் பயிற்சி நிலையம் ஆகியவற்றின் திறப்பு விழாக்கள் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

காரைநகர் வியாவிலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கடற்றொழிலாளர் சங்க பலநோக்கு மண்டபத்தின் திறப்பு விழா நாளை முற்பகல் 10.30 மணிக்கு காரை நகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பலநோக்கு மண்டபத்தை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு திறந்துவைக்க உள்ளார்.

இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மீன்பிடியியல் மற்றும் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் எஸ்.தர்மலிங்கம், யாழ்.மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.மோகனேஸ்வரன் உட்படப் பலர் கலந்துகொள்வர்.

இந்தப் பலநோக்கு மண்டபம் தேச நிர்மாண மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் 'கம நெகும' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

படகு வெளியிணைப்பு இயந்திரம் திருத்தும் வெளிக்களப் பயிற்சி நிலையத்தின் திறப்பு விழா காரைநகர் சிவகாமி அம்மன் கோவிலடியில் அன்று முற் பகல் 11.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட மீன்பிடியியல் மற்றும் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் எஸ்.தர்மலிங்கம், யாழ்.மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.மோகனேஸ்வரன், தொழில்துறை திணைக்கள யாழ்.மாவட்ட செயலக அலுவலர் பி.இராகவன், கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவன வெளிக்கள அலுவலர் கே.திருநீபன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவன அனுசரணையுடன் தொழிற்றுறைத் திணைக்களத்தால் இந்த வெளிக்களப் பயிற்சி நிலையம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-250)

# உலகவங்கியின் வீடமைப்புத்திட்டம்: பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்

யாழ்ப்பாணம், ஜன.15

உலகவங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் மேசன் தொழிற்பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதனும், சிறப்பு விருந்தினராகத் தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசனும் கலந்து கொள்வர்.

அன்றையதினம் பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் அலுமினியம் பொருத்துநர் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அரியாலை சரஸ்வதி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் எஸ்.செந்தில்நந்தனன் ஆகியோர் கலந்து கொள்வர். (201)

## நாளை

| | |
|---|---|
| தை3 | 16.01.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | சஷ்டி |
| | பி.இ. 01.20வரை |
| நட்சத்திரம்: | உத்தரம் |
| | பி.ப.04.44வரை |
| சுபநேரம்: | 06.35 - 08.05 |
| ராகுகாலம்: | 11.05 - 12.35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடல்

குருநகர், ஜன.15

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை மாதாந்த பொதுச் சுகாதாரக் கலந்துரையாடல் நடைபெற உள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இக்கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் [illegible]வரன் தலைமையில் நடைபெறும்.

(202-51)

## கால்கோள்விழாக்கள்

கோப்பாய், ஜன.15

ஊரெழு கணேசா வித்தியாசாலையின் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் எஸ்.திரிகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் எஸ்.அரசகுமார் கலந்து கொள்வார்.

(202-72)

* * *

அளவெட்டி, ஜன.15

தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளியின் கால்கோள் விழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேற்படி தொடக்கநிலைப் பள்ளியின் பழைய மாணவியும் யூனியன் கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியருமான திருமதி மா.பிறேம்குமார் கலந்து கொள்வார்.

(201-23)

* *

அச்சுவேலி, ஜன.15

பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலய கால்கோள் விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் சு.மோகனதாசன் தலைமையில் நடைபெறும்.

விழாவில் யாழ்.கல்வி வலய சமூகக்கல்வி பாடத்துறை ஆசிரிய ஆலோசகர் யோ.அ.தவநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

(202-11)

## பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக!


ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச் சத்துகள் மற்றும்
பால்மா வகைகள் யாவும் நியாய விலையில்...
பெற்றுக்கொள்ள நாடுங்கள்!

**ஆர்.வி.ஜீ.மருந்தகம்**

504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
O.P.D முன்பாக - T.P 021 222 2129
R.V.G ஸ்தாபனம்.
58, நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
T.P 021 222 6806
(C/556720)


## கலாபூசணம்....தென்மராட்சி...2008

**வயிர.கந்தசாமி**
(இ.அ.சே.வகுப்பு-1 ஓய்வுபெற்றவர்)



உறைதிறம் ஆய்ந்த தகையால்
உயர்கலை விருது தந்தோர்
இறைமுறும் கொழித்த வகையால்
இசைவளர் இணைவு தந்தோர்
நிறைநிறம் ஒளிர்ந்த நகையால்
நிலைஉள வாழ்த்துத் தந்தோர்
முறைஅறம் விளைத்த மிகையால்
முகிழ்நன்றி இவர்க்குத் தந்தோர்

- விருது பெற்றவரும், குடும்பத்தவரும் -
முகவரி: (நிரந்தரம்) 'பெரிய தாய் அகம்'
இடைக்குறிச்சி, வரணி.
(தற்காலிகம்) மூத்ததம்பியார் வளவு,
நெல்லியடி, கரவெட்டி.

(81780)

## விரிவுரைகள்

யாழ்ப்பாணம், ஜன.15
தேசிய கல்வி நிறுவன கல்விமாணி இரண்டாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக மேற்படி கல்விமாணிப்பட்டநெறி இணைப்பாளர் இ.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

(201)

## யாழ்.வலய அதிபர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜன.15
யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் 31.12.2008 வரையான தரஉள்ளீடு, உயர்மட்டக்கல்விச் செயற்பாடுகளுக்கான நிதி முன்னேற்ற அறிக்கையை இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் யாழ்.வலயப் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

(201)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
26 * 07 * 1936
மறைவு
15 * 12 * 2008

**அமரர் சரவணை கந்தையா**
(கல்விசாரா ஊழியர், யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

காலனும் தன் கணக்கைக் கணப்பொழுதில் முடித்துவிட
கரைந்தே விட்டதையா முப்பத்து ஒரு நாள்கள்
கண்டது கனவென்று கண்திறந்து பார்க்கின்றோம்
கண்முன்னே நீர் இல்லை கண்கலங்கி நிற்கின்றோம்
பாரினில் எமைஎல்லாம் தவிக்க விட்டு
வானுலகம் சென்று விட்ட ஐயாவே
நிலவில்லா வானம்போல் ஆனதே எம் இதயம்
நீங்களில்லா நாங்கள் தாங்குவோமா இந்நிலையை
ஏங்கி நிற்கின்றோம் உங்கள் ஆத்ம சாந்திக்காய்
என்றுமே நினைத்து நிற்கின்றோம் உங்களை நாங்கள்.

கடந்த 15.12.2008 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (15.01.2009) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

நெஞ்சு கனத்த நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1054 நிலம்

வெற்றி இலக்கங்கள்

மிதுனம் 04 15 27 46

13-01-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 400372473 - 400393783

ஜக்பொட் பரிசு ரூபா. 2,984,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 226,908 | 20/- | 4,538,160/- |
| 2 இலக்கங்கள் | 20,769 | 40/- | 830,760/- |
| 1 இல. + லக்கினம் | 20,502 | 60/- | 1,230,120/- |
| 2 இல. + லக்கினம் | 1,905 | 200/- | 381,000/- |
| 3 இலக்கங்கள் | 553 | 1000/- | 553,000/- |
| 3 இல. + லக்கினம் | 47 | 10,000/- | 470,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,984,000/- | - |
| மொத்தம் | | | 8,603,040/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 270,692 | | 9,103,040/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,997,100/-

தொடர் இலக்கம் 500385850 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2009 ஜனவரி 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| இரத்தினபுரி | 400380135-5-15 |
| மொனராகலை | 400385107-7-16 |
| திருகோணமலை | 400379940-5-09 |
| கேகாலை | 400378847-2-08 |
| கம்பஹா | 400391994-6-10 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

## அரச ஊழியர்களுக்கு சம்பள முற்பணக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜன.15
அரச ஊழியர்களுக்கு விசேட சம்பள முற்பணக் கொடுப்பனவு ரூபா இரண்டாயிரத்து 500 அடுத்த மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் அவர்களது சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்பட வேண்டும் என வடமாகாணத் திறைசேரி சுற்றுநிருபம் மூலம் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளது.

இக்கொடுப்பனவை 2009 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் பெப்ரவரி 28ஆம் திகதிக்கு முன்னர் வழங்கி முடித்துவிட வேண்டும். பெப்ரவரி 28ஆம் திகதிக்குப் பின்னர் இக்கொடுப்பனவு வழங்கப்படுவது நிறுத்தப்படவேண்டும் எனவும் இச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(202-300)

## திருநெல்வேலி பாரதி சனசமூக நிலைய, ஒலிம்பிக் விளையாட்டு கழக அபிவிருத்தி நிதிக்கான அதிஷ்ரலாபச் சீட்டிழுப்பு

1 ஆம் பரிசு - இல.1658
2 ஆம் பரிசு - இல.2055
3 ஆம் பரிசு - இல.0645

ஆறுதல் பரிசில்கள்:-
இலக்கங்கள்:
0205, 0962, 0226, 1420,2820

ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எம் மனமார்ந்த நன்றிகள்.

நிர்வாகத்தினர்,
பாரதி சனசமூக நிலையம்,
திருநெல்வேலி.

## நன்றி நவில்கின்றோம்



**அமரர் நாகலிங்கம் கந்தசாமி**

06.01.2009 அன்று சிவபதமடைந்த எனது சகோதரன் **நாகலிங்கம் கந்தசாமி** அவர்களின் மரணச் செய்தி அறிந்து ஏற்ற உதவி செய்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி, மின்னஞ்சல் மற்றும் தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி அச்சிட்டு வெளியிட்டோருக்கும், மலர்வளையம், மலர்மாலை அணிவித்தோருக்கும், இறுதிக்கிரியை அன்று இரங்கல் உரை நிகழ்த்தியோருக்கும், ஆயுள்கால முகாமையாளராக E.S.P பேரம்பலம் நிறுவனத்தில் கடமையாற்றியமைக்காக செய்நன்றி மறவாமல் உடன்பிறவாத சகோதரனாகக் கொழும்பில் இருந்து இறுதிக்கிரிய வரைக்கும் சகல செலவுகளையும் பொறுப்பேற்று முன்னின்று நடத்தி தனது நன்றிக் கடனைச் செலுத்திய E.S.P பேரம்பலம் சக நிறுவன உரிமையாளருக்கும், ஊழியர்கள், நண்பர்கள், ஏனைய வர்த்தகப் பிரமுகர்களுக்கும் எனது அண்ணா, அண்ணி, பிள்ளைகள், மருமகன் மற்றும் உறவினர்கள் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றிகளை நவில்கின்றேன்.

சகோதரன் நவரத்தினராசா (குட்டி)

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை திருமதி கலா சுந்தரேசன்
அவர்களின் அன்பு மாமனார்

**அமரர் கந்தையா சுந்தரம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையைத்
தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

(C/556640)

## விற்பனைக்கு

BLACK STONE
டீசல் என்ஜின்
(H.P.31 1/2, RPM 8650
DRAIN CYLINDER IN
FROSTY WEATHER
ENGLAND)
விற்பனைக்குண்டு.

அண்ணா தொழிலகம்,
இணுவில்.

## மரண அறிவித்தல்

### திருமதி சுரேஸ்குமார் கலாநிதி



கோண்டாவில் குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட சுரேஸ்குமார் கலாநிதி (13.01.2009) செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் பரிமளம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிராசா சொர்ணம்மா தம்பதியரின் மருமகளும், சுரேஸ்குமாரின் அன்பு மனைவியும், ஆத்மிகாவின் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி, தரம் 2) அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் தயாநிதி, ரவிச்சந்திரன், ஜெயச்சந்திரன் ஆகியோரின் சகோதரியும், தேவகியம்மா காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் தயாநிதி, சிவகாமி, மகாதேவி, ஜெகதீஸ்வரி (வலி. கிழக்குப் பிரதேசசபை) ஸ்ரீதரன், நிர்மலாதேவி (ஆசிரியை - வசாவிளான் ம.ம.வி) நடேசலிங்கம், கேதீஸ்வரி (அளவெட்டி-மல்லாகம் ப.நோ.கூ.ச) பத்மராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (15.01.2009) இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.சுரேஸ்குமார் (கணவர்)
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

(81789)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இந்தவாரம்



ஜனவரி 08

கியூபா நாட்டில் சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு எதிரான மக்கள் புரட்சி வெற்றி பெற்று, புரட்சிநாயகனான பிடல் காஸ்ட்ரோ தலைநகர் ஹவானாவில் 1959ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி காலடி பதித்தார்.



ஜனவரி 09

இங்கிலாந்தின் தலைநகரான லண்டனில் 1931 ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதி நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில், மகாத்மாகாந்தி கலந்துகொண்டார்.

ஜனவரி 10

ஜப்பான் நாட்டின் சக்கரவர்த்தியாக அகிஹிட்டே முடிசூடிக் கொண்டது 1989 ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் திகதிதான்.





ஜனவரி 11

1946ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் திகதிதான் அல்பேனியா குடியரசு நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டது.



ஜனவரி 12

இரண்டாம் உலகப்போரில் ஜேர்மனிக்கு எதிரான தனது தீவிர எதிர்த் தாக்குதல்களை ரஷ்யப்படைகள் 1945ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் திகதியன்றே ஆரம்பித்தன.



ஜனவரி 13

'குவாக்கர்' என்றொரு புதிய சமூகத்தை ஜோர்ஜ் ஃபொக்ஸ் என்பவர் உருவாக்கினார். இவர் 1691ஆம் ஆண்டு ஜனவரி 13ஆம் திகதி இறந்தார்.

ஜனவரி 14

சோயுஸ் - 4 என்ற விண்கலத்தினை ரஷ்யா விண்வெளிக்குச் செலுத்தியது. 1949ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் திகதிதான்.



# புதிய முயற்சிகளில் ஈடுபடும் இளைஞர்களை எமது சமூகம் ஊக்குவிக்க முன்வரவேண்டும்



கேள்வி:- தன்னியக்கமாக மரக்கறி வெட்டும் இயந்திரத்தை உருவாக்கும் போது ஏதேனும் நெருக்கடிகளை எதிர் கொள்ள நேர்ந்ததா?

பதில்:- நிறைய நெருக்கடிகளைச் சந்தித்தேன். பரீட்சைக்குப் படிக்காமல் இந்த வேலையில் ஈடுபட்டதால், எப்போதும் பெற்றோர் என்னைத் திட்டியபடியே இருந்தனர்.

இதைவிட மரக்கறி வெட்டும் இயந்திரத்திற்கு அதிகளவு ஆர்.பி.எம் கொண்ட 'மோட்டர்' ஒன்று தேவைப்பட்டது. ஆனால் அதை வாங்கக் கையிலே காசும் இல்லை. வீட்டிலும் கேட்கமுடியாது. ஏற்கனவே நான் பரீட்சைக்குப் படிக்கவில்லை என்ற ஆத்திரத்தில் வீட்டுக்காரர் இருக்கும்போது பணமும் கேட்டால் அடிதான் விழும். பணத்தை எவ்வாறு பெறலாம் என யோசித்தபோது, என்னுடைய 'சிசுஉதான' வங்கிக் கணக்கில் 5000 ரூபா இருப்பது ஞாபகத்துக்கு வந்தது. உடனேயே வங்கியில் உள்ள பணத்தை அம்மா அப்பாவுக்குத் தெரியாமல் எடுத்து மோட்டரை வாங்கி மரக்கறி வெட்டும் கருவியைச் செய்து முடித்தேன்.

கேள்வி:- மரக்கறி வெட்டும் கருவி தவிர்ந்த வேறு ஏதாவது கண்டுபிடிப்பு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளீர்களா?

பதில்:- அலவாங்கில் ஒரு மிதிபலகையைப் பொருத்தி, அதனைக் காலால் அடிப்பதன் மூலம் தேங்காயை இலகுவாக உரிக்கும் நுட்பத்தைக் கண்டுபிடித்துள்ளேன்.

என்னுடைய மரக்கறி வெட்டும் கருவியில் வருகின்ற சத்தத்தைக் குறைக்கக் கூடிய வழிமுறையையும் கண்டறிந்துள்ளேன்.

இவைதவிர நேரத்தையும், மனித உழைப்பையும் மிச்சப்படுத்தக்கூடிய எமது நாட்டிற்கு அவசியமான சில கருவிகளைக் கண்டுபிடிக்கத் திட்டமிட்டுள்ளேன். அதனால் கையில் பணமில்லாத காரணத்தால் இவற்றை உடனடியாகச் செய்யமுடியாதுள்ளது.

கேள்வி:- புதிய முயற்சிகளுக்கான ஒத்துழைப்பு உங்களுக்குக் கிடைக்கின்றதா?

பதில்:- எமது மத்திய கல்லூரிச் சமூகமும், எமது பாடசாலையில் உள்ள புத்தாக்குநர் கழகமும் எனக்குப் போதிய ஒத்துழைப்பையும் ஊக்கத்தையும் தருகின்றார்கள். எனது பெற்றோர் முதலில் என்னைப் பேசினாலும், எனது கண்டுபிடிப்புகளுக்குக் கிடைத்த விருதுகளை அறிந்து, இப்போது எனக்குப் பக்கபலமாக இருக்கிறார்கள். எனினும் எமது சமூகத்திடமிருந்து என்போன்ற புத்தாக்குநர்களுக்குப் போதிய ஒத்துழைப்பு கிடைப்பதில்லை. உதாரணமாகக் கொழும்புப் பகுதியைச் சேர்ந்த ஒரு மாணவன் நான் கண்டுபிடித்த மரக்கறி வெட்டும் இயந்திரத்தை உருவாக்கி இருந்தால், அவனுக்கு ஊடகங்களின் ஆதரவும், பொருளாதார ரீதியான ஊக்குவிப்புகளும் குவிந்திருக்கும். ஆனால் இங்கு நிலைமை தலைகீழாக இருக்கிறது. தேசிய ரீதியில் சாதித்த பிறகும் கூட எங்களுக்குரிய ஆதரவை நல்க எமது சமூகம் பின்னிற்கிறது.

கேள்வி:- புத்தாக்குநர்களுக்கு எவ்வகையான உதவிகளை யார், யார் வழங்கலாம் என எதிர்பார்க்கிறீர்கள்?

சந்திப்பு: ஔண்யன்

பதில்:- இன்றைய காலத்தில் வங்கிகள், தனியார் நிறுவனங்கள் எல்லாம் தம்முடைய விளம்பரங்களுக்காக பணத்தைத் தண்ணீராகச் செலவழிக்கின்றன. இப்படி வாரியிறைக்கும் பணத்தை என் போன்ற புத்தாக்குநர்களின் ஆக்கபூர்வமான முயற்சிகளில் முதலீடு செய்யலாம். இதுதவிர கல்வி, விளையாட்டுப் போன்ற துறைகளில் சாதனை புரிந்தவர்களை எமது சமூகம் கௌரவப்படுத்துவதுபோல, புத்தாக்குநர்களையும் கௌரவப்படுத்தி, அரவணைக்க வேண்டும். ஏனெனில் வெறும் ஏட்டுக்கல்வியும், விளையாட்டும் மட்டுமே எதிர்காலச் சமூகத்தைத் தீர்மானிப்பதில்லை. புத்தாக்குநர்களின் புதுமையான கண்டுபிடிப்புகளே சமூகத்தை வளம்படுத்த வல்லவை என்பதை அனைவரும் உணர வேண்டும். பாடசாலைகளும், பெற்றோர்களும் இவ்வாறான புதிய முயற்சிகளுக்கு ஆதரவளிக்க வேண்டும். அப்போதுதான் என்போன்ற பல புதிய புத்தாக்குநர்கள் உருவாகுவதோடு சமூகமும் உயர்வடையும்.

## பெற்றோர்கள்

ஈரைந்து மாதம் வயிற்றினால் எமையேந்தி
ஈரம்படாநத்தை ஓடுபோல் எமைக் காத்து
மண்ணில் கால் பதிக்க வைத்த தெய்வமே
மண்ணுலகும் போற்றும் எம் அன்னையே

அன்னையின் அரவணைப்பில் பிறந்திட்ட எம்மை
அன்பினால் பரிமளிக்க வைத்த எம் குலவிளக்கே
ஆரமுது அறிவூட்டிய எம் தெய்வமே
ஆண்டவன் படைப்பாய் வந்த எம் தந்தையே

பெயர் சொல்ல பிள்ளைகளாய் பெற்றெடுத்த எம்மை
பெட்டகம் போல் அன்பினில் பூட்டி வைத்தவர்களே
வார்த்தை ஒன்று போதாது உம் அன்பை கூறிட
வருடம் ஒன்று போதாது தொடர்பகுதியாய் வரைந்திட

பிருந்தாபியா கந்தசாமி



## குட்டிச்செய்திகள்

- இரத்தத்தில் உள்ள சிகப்பு அணுக்கள் 120 நாள்கள் உயிருடன் இருக்கும்
- யானையின் நாடித்துடிப்பு நிமிடத்துக்கு 25 தடவைகள் தானாம்
- ரஷ்யாவில் பிச்சைக்காரர்களே இல்லையாம்
- சிகப்பு ஒளியின் அலை நீளமானது. இதனால்தான் போக்குவரத்து சமிக்ஞையில் இந்த நிறம் பயன்படுத்தப்படுகின்றது.
- உலகிலேயே மிகப் பழமையான பல்கலைக்கழகம் ரோம் நகரில் தான் உள்ளது
- கடலின் ஆழத்தைக் கண்டறியப் பயன்படும் கருவியின் பெயர் சோனகா
- உலக சனத்தொகையில் 60 சதவீதம் பேர் ஆசியக் கண்டத்தில் தான் வசிக்கின்றனர்
- ஹொக்கி உலகக் கோப்பையை வடிவமைத்த நாடு- பாகிஸ்தான்
- எமது நுரையீரலில் உள்ள சிற்றறைகள் 5 லட்சம்
- பாம்பின் விஷம் 32 வருடங்கள் வரை விஷத்தன்மை மாறாமல் இருக்கும்

தேனுகா,மகேந்திரன்.

### மனச்சாட்சி

உறவுகள் இன்றி இருந்தேன்
உணர்வுகளால் என்னைத் தீண்டினாய் - நீ
தீண்டியதால் தானோ என்னமோ
நான் உயிர் பெற்றேன் மறுபடியும்
தீண்டியது யாருமல்ல - அதுதான்
என்மனச்சாட்சி

நிலா, பொலிகை.

## கேள்விக்கென்ன பதில் -14

**சரியான விடை**

மாணவர்களின் எண்ணிக்கை 04
கதிரைகளின் எண்ணிக்கை 03

**பரிசு பெறுவோர்**

1. த.தர்மினி
வாகீஸ்வரி வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.
2. க.ராகுலன், தரம் 8 ஈ ,
இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
3. ஸ்ரீ அரவிந்தன், 300 நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

1. கு.ஜனீல்சன்
தரம் 7 டி,கொக்குவில் இந்துக் கல்லூரி
2. டிலானி சர்வானந்தராசா
16/10 அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு.
3. மரியதாஸ் லக்ஸ்ரெலா,
63 ஈச்சமோட்டை, கடற்கரை வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.
4. ஸ்ரீ சொரூபிகா,
ஸ்ரீ முருகன், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை
5. பா.தவமணி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி
6. பீற்றர் கெனமன் பிறிம்ஸ்
இல 71, ஈச்சமோட்டை, பாஷையூர், யாழ்ப்பாணம்.
7. காயத்திரி திருமேனி,
மயிலங்காடு, ஏழாலை தெற்கு, ஏழாலை.
8. சு.சச்சிதானந்தன்
12 ஆம் வட்டாரம், நெடுந்தீவு கிழக்கு.
9. பி.கவிதாசன்
சாளம்பை, புலோலி மேற்கு.
10. தே.துஷிமளா,
கோண்டாவில்.

## கேள்விக்கென்ன பதில்: 16

(அனுப்பியவர்: யோ.பார்த்தீபன், மிருசுவில் வடக்கு)

ஒரு கடற்கரையில் 3 பிசாசுகளும், 3 மனிதர்களும் நிற்கின்றார்கள். இவர்கள் ஆறுபேரும் கடலைக்கடக்க ஒரு படகு உள்ளது.

அந்தப்படகில் ஒரேநேரத்தில் இருவர் மட்டுமே பயணிக்கலாம். எனினும் எத்தனை தடவையும் செல்லலாம். இவ்வாறு மனிதர்களும், பிசாசுகளும் அந்தப் படகைப் பயன்படுத்தி கடலின் மறுகரைக்குச் செல்லவேண்டும். எனினும் கடலின் இருகரைகளிலும் மனிதர்களின் [illegible] எண்ணிக்கை அ[illegible] விடும். எனவே இந்த ஆறுபேரும் எப்படிக் கடலைக் கடப்பார்கள்?

(உங்கள் விடைகளை 23-01-2009க்கு முன்னர் அனுப்பி வையுங்கள்)

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................
முகவரி :-..............................
:-..............................
.................... ....................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## தரம்-05 மாணவர்களுக்கான
# தயார்படுத்தல் பரீட்சைத் தொடர் 2009


**வினாத்தாள் - I** நேரம் : 45 நிமிடங்கள்

முதலாம், இரண்டாம் வினாக்களில் நான்கு உருக்களில் மூன்றில் உள்ள இரு உருக்களுக்கும் இடையே ஒரு குறித்த ஒற்றுமை உண்டு. ஓர் உருவில் உள்ள இரு உருக்களுக்கும் இடையே அத்தகைய ஒற்றுமை இல்லை. அந்த உரு வினைத் தெரிவு செய்க.

01. 1) 2) 3) 4)



02. 1) 2) 3) 4)




03. தொடர்ந்து துன்பத்திற்கு உள்ளானவரைக் குறிப்பது எது?
   1) பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது.
   2) காழுல் விழுந்தவனை காரில் ஏற்றியது.
   3) பல் இழந்தவனுக்கு பொய்ப்பல் பூட்டியது.
   4) கோயில் மணி அடிக்க பூசாரி சென்றது.

04. ''பரீட்சை செய்தால் சித்தி அடையலாம்'' எனும் கூற்றை விவரிப்பது எது?
   1) பரீட்சை செய்யும் அனைவரும் சித்தியடைவார்கள்.
   2) பரீட்சை செய்யும் சிலரே சித்தி அடைவார்கள்.
   3) பரீட்சை செய்யும் அனைவரும் சித்தி அடையமாட்டார்கள்.
   4) பரீட்சை செய்யாதவர்களும் சித்தி அடைவார்கள்.

05. களவெடுக்கும்போது அகப்பட்ட ஒருவரை குறிக்கப் பொருத்தமான உவமானம் எது?
   1) ஆப்பிழுத்த குரங்குபோல் அகப்பட்டார்.
   2) கையும் மெய்யுமாக அகப்பட்டார்.
   3) காதோடு காது வைத்தாற்போல் அகப்பட்டார்.
   4) அச்சமற்ற சிங்கம்போல் அகப்பட்டார்.

ஒரு நகரின் பாடசாலை, மருத்துவமனை, பேருந்து நிலையம், புகையிரத நிலையம், விமான நிலையம், சந்தை, வங்கி ஆகியன அமைந்துள்ள விதமும் இணைக்கும் வீதிகளின் தூரங்களைக் குறிக்கும் படம்.





06. கமலனும், விமலனும் வங்கியிலிருந்து பாடசாலைக்கு சென்றார்கள். கமலன் குறுக்குப் பாதை களாலும் விமலன் சுற்றுப் பாதைகளாலும் சென்றார்கள். இருவரும் பயணித்த மொத்தத் தூரங்களுக்கிடையிலான வித்தியாசம் யாது?
   1) 300m. 2) 400m. 3) 1600m. 4) 1200m.


07. விமலா பேருந்து நிலையத்திலிருந்து வங்கி சென்றடைய 1100m நடந்து சென்றாளாயின் அவள் கடந்துசென்ற இடங்களை ஒழுங்கில் குறிக்கும் விடை எது?
   1) பேருந்து நிலையம், புகையிரத நிலையம், சந்தை, வங்கி.
   2) பேருந்து நிலையம், புகையிரத நிலையம், விமான நிலையம், வங்கி.
   3) சந்தை, விமான நிலையம், பேருந்து நிலையம், வங்கி.
   4) வங்கி, புகையிரத நிலையம், சந்தை, பேருந்து நிலையம்.

08. ஒரு குடும்பத்தில் தாயும் மகனினதும் நிறைக்கு தந்தையும் மகளினதும் நிறை சமனாக இருந்தது. மகளை விட மகன் 6 கிலோகிராம் நிறை அதிகமாக இருந்தான். தந்தையை விட தாய் 3 கிலோகிராம் நிறை குறைவாக இருந்தாள். தந்தையை விட மகன் 18 கிலோகிராம் நிறை குறைவாக இருந்தான். இவர்களின் நிறைகளை ஒழுங்கில் காட்டும் விடை எது?
   1) மகன், மகள், தாய், தந்தை. 2) தந்தை, மகள், தாய், மகன்.
   3) மகள், மகன், தாய், தந்தை. 4) தாய், மகள், மகன், தந்தை.


09. ஐம்பது ரூபாவுக்கு ஒரு கிலோகிராம் அரிசியும் ஒரு கிலோகிராம் பருப்பும் வாங்கலாம். எண்பது ரூபாவுக்கு இரண்டு கிலோகிராம் அரிசியும் ஒரு கிலோகிராம் பருப்பும் வாங்கலாம் ஆயின், ஒரு கிலோ அரிசியின் விலை ஒரு கிலோ பருப்பின் விலையை விட எவ்வளவு அதிகமாகும்?
   1) ரூபா 30.00 2) ரூபா 20.00 3) ரூபா 10.00 4) ரூபா 40.00

10. கலாவின் மகள் சீதா, ரகுவின் தாய் சீதா, ராமனின் சகோதரி சீதா. எனவே, கலாவிற்கு ரகு என்ன உறவு முறை?
   1) மகன். 2) மருமகன். 3) பேரன். 4) மாமன்.

11.  ஆகிய இரு உருக்களையும் சேர்க்கும்போது கிடைக்கும் உரு எது?



1) 2) 3) 4)

12.  ஆகிய இரு உருக்களையும் சேர்க்கும்போது கிடைக்கும் உரு எது?




1) 2) 3) 4)

13. உலகம் → இலங்கை எனில், உடல் → ........................
   1) இந்தியா. 2) கால். 3) மீன். 4) கீரை.

14. குதிரை → குரை எனில், மதுரை → ......................
   1) மது. 2) துரை. 3) மரை. 4) கரை.

15. பாடசாலை, மாணவன், மாணவி, ஆண் என்பதைக் காட்டுவதற்கான இவ்வுருவில் B என்பது எதைக் குறிக்கிறது?
   1) மாணவன். 2) ஆசிரியர்.
   3) ஆண். 4) பெண்.




16.


| | | |
|---|---|---|
| 9 | 12 | 15 |
| 6 | 3 | 18 |
| | 24 | 21 |


வெற்றுக்கூட்டில் வரவேண்டிய எண் எது?
   1) 1 2) 5
   3) 25 4) 27

17. வெற்றுக்கூட்டில் வரவேண்டிய எண் எது?
   1) 8 2) 9
   3) 10 4) 11




18. எரியும் மெழுகுத்திரி ஒன்றை மூன்று துளைகள் இடப்பட்ட அட்டைகளினூடாகப் பார்க்கும்போது தோன்றும் படம். துளைகள் போடப்பட்ட அட்டைகள் நேராக இருந்தபோது மாத்திரமே சுடர் தெரிந்தது. இதன் மூலம் நாம் அறிவது,
   1) ஒளி வளைந்து வளைந்து செல்லக்கூடியது.
   2) ஒளி நேர்கோட்டில் மாத்திரம் செல்லும்.
   3) இரண்டு கண்களினாலும் ஒளியைப் பார்க்க முடியாது.
   4) ஒரு கண்ணால் மட்டுமே ஒளியைப் பார்க்க முடியும்.



19. 



இரும்புச் சட்டம் ஒன்றில் வெவ்வேறு இடங்களில் மெழுகுத்துண்டுகளை வைத்து இரும்புச் சட்டத்தின் ஒரு முனையை வெப்பமேற்றியபோது மெழுகுகள் ஒவ்வொன்றாக ஒழுங்கில் கரையத் தொடங்கியது இதன் மூலம் நாம் அறிவது,
   1) இரும்பினூடாக வெப்பம் கடத்தப்படவில்லை.
   2) மெழுகுவர்த்தி இரும்பைச் சூடாக்கியது.
   3) இரும்பினூடாக வெப்பம் கடத்தப்படுகின்றது.
   4) மெழுகுகள் ஒன்றாகவே கரையும்.

20. வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள கூடுகளில் குறுக்காக நான்கு எழுத்துக்கள் கொண்ட நான்கு சொற்கள் உருவாகும் வகையில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.
   1) சமயம். 2) சாதிகள்.
   3) சாக்கடை. 4) சாதகம்.

| | | | |
|---|---|---|---|
| பா | ட | | லை |
| கா | கி | | ம் |
| ப | க் | | ம் |
| சி | ல | | பு |

21. லண்டனுக்குச் சென்று உயர்கல்வி கற்க விரும்பிய கமலா தனது பயணத்திற்கு ஏற்பாடு செய்த சில தகவல்கள் கீழே ஒழுங்கின்றி உள்ளன. அவற்றை ஒழுங்கமைத்த விடையைத் தெரிவு செய்க.
   1) இலங்கையிலுள்ள லண்டன் தூதுவராலயத்தில் விசாவிற்கு விண்ணப்பித்தாள்.
   2) லண்டன் நோக்கி விமானத்தில் பயணமானாள்.
   3) லண்டன் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பம் அனுப்பினாள்.
   4) கல்வி கற்பதற்கான விசா அனுமதிப்பத்திரம் கிடைத்தது.
   5) பல்கலைக்கழகத்தின் அனுமதிப்பத்திரம் கிடைத்து.
   1) 3, 2, 1, 4, 5 2) 5, 4, 3, 2, 1 3) 3, 4, 5, 1, 2 4) 3, 5, 1, 4, 2

22. இக்கடிகாரத்தைக் கண்ணாடியை நோக்கிக்காட்டி கண்ணாடிக்குள் பார்த்தால் தெரியும் நேரம் யாது?
   1) 12.30 2) 1.00
   3) 5.30 4) 6.30



விலைகளை ஒப்பிட்டு வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

| | |
|---|---|
| புத்தகம் | 1 |
| பேனா | 1 |
| விலை ரூபா | 17.00 |

| | |
|---|---|
| புத்தகம் | 3 |
| பேனா | 2 |
| விலை ரூபா | 47.00 |

23. புத்தகம் ஒன்றின் விலை யாது?
   1) ரூபா 10.00 2) ரூபா 12.00 3) ரூபா 13.00 4) ரூபா 4.00

24. பேனா ஒன்றின் விலை யாது?
   1) ரூபா 10.00 2) ரூபா 12.00 3) ரூபா 13.00 4) ரூபா 4.00

கமல், விமல், அமல் ஆகிய மூவரிடமும் இருந்த மாபிள்களின் எண்ணிக்கைகள் பற்றிய தகவல்கள் பின்வரும் குறியீடுகள் மூலம் காட்டப்படுகின்றன.





25. கூடிய எண்ணிக்கையான மாபிள்களைக் கொண்டிருப்பவர் யார்?
   1) கமல். 2) விமல். 3) அமல். 4) யாருமில்லை.

26. குறைந்த எண்ணிக்கையான மாபிள்களைக் கொண்டிருப்பவர் யார்?
   1) கமல். 2) விமல். 3) அமல். 4) யாருமில்லை.


A, B, C எனும் மூவர் பாடசாலையிலிருந்து வீடுகளுக்குச்சென்ற ஒழுங்கை வரிப்படம் காட்டுகின்றது.

27. இவர்களில் வலது பக்கம் அதிகம் திரும்பியவர் யார்?
   1) A. 2) B.
   3) C. 4) யாருமில்லை.

28. இவர்களில் வலது, இடது பக்கங்கள் சமமாகத் திரும்பியவர்கள் யாவர்?
   1) A, C. 2) A, B.
   3) B, C. 4) யாருமில்லை.




29. இவ்வுருவின் சுற்றளவு யாது?
   1) 28cm. 2) 56cm.
   3) 40cm. 4) 44cm.




பின்வரும் பாடலைக்கொண்டு 30 - 32 வரையான வினாக்களுக்கு விடை தருக.

வண்டி இழுக்கும் நல்ல (1) ............................
நெல்லு வயலில் உழுதுவரும் (2) ............................
அண்டிப் பிழைக்கும் நம்மை (3) ............................
இவை ஆதரிக்க வேணுமடி பாப்பா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. இப்பாடலின் இல.1 இற்குப் பொருத்தமான சொல் எது?
1) மாடு. 2) ஆடு. 3) குதிரை. 4) காகம்.


31. இப்பாடலின் இல.2 இற்குப் பொருத்தமான சொல் எது?
1) மாடு. 2) ஆடு. 3) குதிரை. 4) காகம்.

32. இப்பாடலின் இல.3 இற்குப் பொருத்தமான சொல் எது?
1) மாடு. 2) ஆடு. 3) குதிரை. 4) காகம்.


33. இந்த நான்கு உருக்களிலும் உள்ள உயிரினங்களிலிருந்து பெறக்கூடிய பயன்களில் ஒன்று பொருத்தமற்றது. அதன் கீழ்க் கோடிடுக.





34. இந்த நான்கு உருக்களிலும் உள்ள உயிரினங்களில் ஒன்று வீடுகளில் வளர்ப்பதில்லை. அதன் கீழ்க் கோடிடுக.




35. இந்த நான்கு படங்களிலும் உள்ளவர்களில் ஒருவர் மக்களுக்கு பயனற்றவர். அவரின் கீழ்க் கோடிடுக.




கீழேயுள்ள உருவை அவதானித்து வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.




36. வட்டத்திற்கு மட்டும் உரிய இலக்கம் எது?
..........................................

37. வட்டத்திற்குள் உள்ள இலக்கங்கள் எவை?
..........................................

38. சதுரத்திற்கு மட்டும் உரிய இலக்கம் எது?
..........................................

39. சதுரத்திற்குள் உள்ள இலக்கங்கள் எவை?
..........................................

40. முக்கோணிக்கு மட்டும் உரிய இலக்கம் எது?
..........................................

**ஆக்கம்:- திரு.பி.அம்பிகைபாகன்,**
125/6, 16 ஆவது ஒழுங்கை,
கல்லூரி வீதி, கொழும்பு-13.
தொலைபேசி இலக்கம்:-011-2542215.

11.12.2008 இல் வெளிவந்த வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 01 - 2 | 02 - 3 | 03 - 2 | 04 - 2 | 05 - 3 |
| 06 - 2 | 07 - 3 | 08 -1 | 09 - 1 | 10 - 2 |
| 11 -1 | 12 -3 | 13 - 2 | 14 - 3 | 15 - 1 |
| 16 - 2 | 17 - 2 | 18 - 1 | 19 - 2 | 20 - 3 |
| 21 - 3 | 22 - 3 | 23 - 2 | 24 - 3 | 25 - 3 |
| 26 - 2 | 27 -2 | 28 - 2 | 29 - 1 | 30 - 3 |
| 31 - 3 | 32 - 3 | 33 - 2 | 34 - 1 | 35 - 3 |
| 36 - 10 | 37 -15 | 38 - 9 | 39 - 4 | 40 - 3 |

18.12.2008 இல் வெளிவந்த வினாத்தாள் II இற்கான விடைகள்

01 - நிலா, 02 - மனிதர், 03 - போனேன், 04 - கருமம்/பணி/உழைப்பு, 05 - சூடு, 06 - காண்பதெதற்கு, 07 - எங்கு + எங்கு, 08 - நிலா/காடு/ மலை/மனிதர்/பூ/சூரியன், 09 - தேவையற்ற பொருட்களைக் கண்டகண்ட இடங்களில் வீசாதீர்கள், 10 - சுத்த முள்ள இடம் எங்கும் சுகம் உண்டு, 11 - தவறு, 12 - முயற்சி, 13 -Parrot, 14 - Book, 15 - பாற்சோறு, 16 - பறவை, 17 - கழுகு, 18 - வாத்து, 19 - கிளி, 20 - கொக்கு, 21 - 3, 22 - 3, 23 - 2, 24 - 2, 25 - 3, 26 - 2, 27 - 1, 28 - 3, 29 - 2, 30 3, 31 - 2, 32 - 3, 33 - 1, 34 - 2, 35 - 3, 36 - வெளவால், 37 - தீதாள், 38 - குதிரை, 39 - அத்தாங்கு, 40 - தீக்கோழி, 41 - 943, 42 - 120 பேர், 43 - 248 பேர், 44 - 370m, 45 - 7 பிஸ்கட்டுகள், 46 - 24cm, 47 - 5:45, 48 - 5/8, 49 - சனிக்கிழமை, 50 - 96 ரூபா, 1 - 6 வரை பொருத்தமான கருத்துள்ள வாக்கியங்கள்.

**ஆசிரியர்கள் :- திரு.பி.பத்மநேசன்**
**&**
**திரு.எஸ்.தயாளலிங்கம்**

**A.C.A கல்வி நிலையம்,**
**திருமலை.**
தொடர்புகளுக்கு : 060-2263511

**அன்பு மாணவர்களே!**

இப்பகுதியில் வெளியாகியுள்ள வினாத்தாள் -1 இற்கான விடைக்குறிப்புகளுடன், வினாத்தாள் - 11 எதிர்வரும் வியாழக்கிழமை பிரசுரமாகும். இப்பகுதியில் தொடர்ச்சியாக வெளிவரும் வினாத்தாள்களை நேரங்கணித்துப் பயிற்சிசெய்து அடுத்த வருடம் நடைபெறவுள்ள அரச பரீட்சைக்கு இன்றே தயாராகுங்கள். உங்கள் விடைகளை ஆசிரியரின் விடைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்க மறவாதீர்கள்!

கல்விச்சுடர் தொடர்பான
விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் கீழ்வரும்
தொலைபேசி இலக்கங்களுடன்
தொடர்புகொள்ளவும்.
011-2399666(125)/071-6850005/071-4273035.

# மிக அவதானமாக மேற்கொள்ளப்பட வேண்டிய புலம்பெயர்ந்த தமிழர்களின் திருமணப் பதிவுகள்

**தமிழ்ப் பிரதேசத்தின் அவலநிலை காரணமாகப் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் பெற்றோரையும் உற்றாரையும் தம் பண, பல உதவியால் பேணி வருவது மட்டுமன்றி தம் மண்ணில் மணமகனையும் மணமகளையும் தெரிவு செய்கின்றனர். அவர்களுக்கு உதவுமுகமாக இக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

இன்றைய அவலநிலையில் வடக்கில் இருந்து கொழும்பு வரும் ஒருவர், வெளிநாட்டில் இருந்துவரும் ஒருவரைத் திருமணம் செய்யும்போது அவர்களது திருமணப்பதிவு எப்படி அமைய வேண்டும். அதன்மூலம் திருமணம் முடித்தவர் சிரமமின்றி எப்படி வெளிநாடு செல்ல முடியும் என்பதை அறிந்திருத்தல் மிகவும் அவசியமாகும்.

வடக்கில் இருந்து வருபவர் திருமணப் பதிவிற்கு 10 நாள்களுக்கு முன்பாகக் கொழும்புக்கு வருதல் வேண்டும் (அரச ஊழியரைப் பொறுத்தளவில் இது முக்கியமானது). வெளிநாட்டில் இருந்து வருபவர் ஆகக் குறைந்தது 4 நாள்களுக்கு முன்பாவது இலங்கை வருதல் வேண்டும். கொழும்பில் இருக்கும் உறவினர்களோ, நண்பர்களோ பதிவினை மேற்கொள்ளும் பதிவாளரிடம் முன்னறிவித்தல் கொடுத்து பதிவிற்கான இடம், திகதி, நேரம் என்பவற்றை நேரகாலத்துடன் ஒதுக்கிக் கொள்ளல் வேண்டும். மணமக்கள் கொழும்பிற்கு வந்தவுடன் நொத்தீசு (திருமண அறிவித்தல்) போடலாம். தேவையாயின் விசேட அனுமதியும் பெறலாம். வடக்கில் இருந்து கொழும்பு வந்தவர் வெளிநாட்டில் இருந்து வருபவரை எதிர்பார்த்தும் நொத்தீசு போடலாம். இருவருமே கொழும்பில் இருந்தால் முறைப்படி 14 நாள்களுக்கு முன் நொத்தீசு போட வேண்டும். பின்வரும் விடயங்களைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

தற்போது கொழும்பில் தமிழ் மொழி மூலம் விவாகப் பதிவுசெய்து கொள்ளலாம். தமிழ்மொழி மூலம் செய்வதால் பதிவில் தவறுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளலாம். சிங்களத்தில் பதிவதாயின் சிங்களம் வாசிக்கத் தெரிந்த தமிழர் ஒருவரை அருகில் வைத்து எல்லாவற்றையும் சரி பார்த்துக் கொள்ளுதல் மிக முக்கியமானதாகும். பெயரை எழுதும்போது பிறப்புச்சான்று , அடையாள அட்டை, கடவுச் சீட்டு என்பவற்றைப் பரிசீலித்து சரியான முறையில், சரியான பெயரை, சரியான உச்சரிப்புடன் எழுதுதல் வேண்டும். அந்நியநாட்டு முறைகளை அனுசரித்துப் பெயர் எழுதுவதைத் தவிர்த்து இலங்கைச் சட்டப்படி எழுதுதல் வேண்டும். ஏனெனில் வெளிநாட்டுத் தூதரகங்கள் இலங்கைச் சட்டப்படியே அவற்றைச் சரிபார்க்கின்றன. தமிழ் முறைப்படி தகப்பன் பெயர் மேலும் மணமக்களின் பெயர் கீழும் வரக்கூடியதாக எழுதப்படல் வேண்டும். இது ஆண், பெண் இருவருக்கும் பொருந்தும். திருமணப் பதிவிற்கு முந்தியதான பிறந்த தினத்திலான வயது குறிப்பிடல் வேண்டும். வயதைக்கணிப்பதில் ஒன்றிற்கு இரண்டு முறை சரிபார்த்துக் கொள்வதுடன் பதிவாளரும் அதனைச் சரிபார்த்து உறுதிப்படுத்திக் கொள்கிறாரா என்பதைக் கவனித்தலும் வேண்டும். முகவரி கொழும்பு முகவரியாகவே இருத்தல் வேண்டும். ஆண், பெண் இருவரும் ஒரே முகவரியையும் குறிப்பிடலாம். (ஹோட்டல், லொட்ஜ் முகவரிகளைத் தவிர்த்து உறவினர், நண்பர்களின் நிரந்தர முகவரிகளைக் குறிப்பிடுவது நல்லது என்பது எனது அபிப்பிராயம்). லௌகீக நிலைமையை , வாலிபன், கன்னிகை, விவாகரத்துப் பெற்றவர், தாரமிழந்தவர் போன்ற சரியான விவரங்களைக் குறிப்பிடல் வேண்டும். விவாகரத்துத் தொடர்பில் தீர்ப்பின் பிரதியும், தாரமிழந்தவர் தொடர்பில் மரண அத்தாட்சிப்பத்திரமும் வேண்டும். நீண்டகால[illegible] வருபவராயின் [illegible] தவர் என்பதைப் பதிவாளர் ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையில் ஏதாவது ஆவணமூலம் உறுதிப்படுத்தல் வேண்டும் (இங்கு உண்மையை உண்மையாக எழுதுதல் மிக முக்கியம்). சாதி அல்லது இனம் என்பதில் இலங்கைத் தமிழர் என்பதே பெரும்பாலும் பொருந்தும். அதைவிட்டுக் கனடியப்பிரஜை என்று எழுதுவது தவறு. இங்கு கேட்கப்பட்டது Race என்ன என்பதே தவிர Nationality என்பதல்ல. Race வேறு Nationality வேறு. Nationality மாறும் Race மாறாது. நிரந்தரமான தொழில் இல்லாதவர்கள் தொழிலைக் குறிப்பிடாமல் விடலாம். தொழில் குறிப்பிடப்படல் வேண்டும் என்பது கட்டாயம் அல்ல. தகப்பனின் பெயரையும் சரியாகக் குறிப்பிடல் வேண்டும் தந்தை காலமாகிவிட்டிருந்தால் அது பற்றியும் குறிப்பிடல் வேண்டும். திருமணம் நிறைவேறும்போது மூன்று பிரதிகளிலும் உரிய விவரங்கள் சரியாக நிரப்பப்பட்டுள்ளதா என்பதை மணமக்கள் சரிபார்க்க வேண்டும். குறிப்பாகத் தங்கள் பெயரை ஒவ்வொரு எழுத்தாகச் சரி பார்த்துக் கொள்ள வேண்டும். பிழையிருப்பின் பதிவாளரைக் கொண்டு திருத்திக் கொள்ளல் வேண்டும். பதிவானது சிங்களத்தில் பதியப்படின் சிங்களம் தெரிந்த ஒருவர் மூலம் பெயர் விவரங்களைச் சரி பார்த்துக் கொள்ள வேண்டும். சிங்களத்தில் தமிழ் உச்சரிப்பு (ஒலியமைப்பு) சரியாக உள்ளதா எனப் பார்க்க வேண்டும். பாலச்சந்திரனை பாலசந்திரன் என்றும், பாலசுந்தரத்தை பாலசந்தரம் என்றும் எழுதி விடுவார்கள். நன்றாகக் கவனித்துப் பார்த்தல் வேண்டும். அதே போல் முழுப் பெயரை மேலே குறிப்பிட்டது போன்று எழுதாமல் மாறி மாறி எழுதி விடுவார்கள். ஆதலால் சிங்களத்தில் பதிவுசெய்யும் போது நொத்தீசுப் பாவத்தைச் சிங்களத்தில் சிங்களம் தெரிந்த ஒருவர் மூலம் தாமாகவே எழுதிக் கொடுத்தால் இவ்வாறான தவறுகளைத் தீர்க்கலாம் என்பது எனது அபிப்பிராயம்.

## தற்போது கொழும்பில் தமிழ்மொழி மூலம் விவாகப் பதிவு செய்துகொள்ள முடியும்

திருமணப்பதிவில் ஏற்படும் ஒரு எழுத்துப் பிழையை மாற்றுவதானால் கூட மாவட்ட நீதிமன்றின் அனுமதி பெறப்படல் வேண்டும். இதற்குக் குறைந்தது 2 மாதகாலம் தேவைப்படும். ஆதலால் பிழையின்றிப் பதிவு செய்வதில் அதிக அக்கறை காட்ட வேண்டும்.

பதிவு முடிந்ததும் வழங்கப்படும் இலவசப் பிரதியைத் திருமணப் பரிசாகப் பத்திரமாக வைத்திருத்தல் பொருத்தமாகும். அவ்வாறான ஒரு சான்று ஒன்றுதான் கிடைக்கும். மேலதிகப் பிரதிகளைப் பதிவாளரிடம் இருந்து ஓரிரு நாள்களில் பெற்றுக் கொள்ளலாம். அவரின் உதவியுடன் பிரதேச செயலகத்தால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளைக்கூடப் பெற்றுக் கொள்ள முடியும். அவற்றையே கடவுச் சீட்டு, விசா என்பவற்றுக்குப் பாவித்தல் பொருத்தமானதாகும்.

**ந.சதாசிவஐயர்,**
உதவிப்பதிவாளர் நாயகம்,
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
தலைமை அலுவலகம்,
பத்தரமுல்லை.

பதிவுக்கு முன் பதிவாளருடன் கதைத்து வேண்டிய ஒழுங்குகளைச் செய்து கொள்ளவேண்டும். ஒரே நாளில் பதிவாளருக்குப் பல திருமணப்பதிவுகள் இருக்கலாம். ஆதலால் தமது திருமணப் பதிவில் சம்பந்தப்பட்டவர்கள் அக்கறையாக இருந்து சரியாகப் பதிவு செய்வதில் கவனம் செலுத்துதல் வேண்டும். திருமணப்பதிவில் தகப்பனின் கடமைகள் பல இருக்கும். விருந்தினர்களை வரவேற்க வேண்டியிருக்கும். அமைச்சர் போன்ற பெரும் பிரதிநிதிகளை வரவேற்போர் அதிலேயே பெரிதும் அக்கறை காட்டுவர். ஆதலால் பதிவுக்குப் பொறுப்பாக நெருங்கிய உறவினர், நண்பர் ஒருவர் ஏற்பாட்டாளராகச் செயற்படின் பதிவு சிறப்பாக அமையும்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துக் கல்லூரியின் தமிழ் ஆசான்
# திரு.வே.சிவகுருநாதன் அவர்களின் பணிநலன் பாராட்டு மலர்

## கடமை, கண்ணியம், கட்டுப்பாடுமிக்க ஆசான்



புகழ் பூத்த எமது கொக்குவில் இந்துக் கல்லூரியை வளமாக்கிய ஆசிரிய மணிகளின் வரிசையில் தனியிடம் பெறுபவர் எனது அன்பிற்குரிய திருவாளர் வேலுப்பிள்ளை சிவகுருநாதன் அவர்கள். கடந்த 37 வருடங்களாக ஆசிரியராக இருந்து தன்னை மாணவர்களுக்காக அர்ப்பணித்தவர். எளிமையும், புலமையும், திறமையும், ஆற்றலும் கொண்ட இவர் எமது கல்லூரியின் தமிழ்ப் பாடத்திற்கான இணைப்பாளராக மிகச் சிறப்பாகப் பணியாற்றியதோடு கல்லூரி நிர்வாகத்தினால் ஒப்படைக்கப்படும் பொறுப்புக்களைக் கடமை, கண்ணியம் தவறாது கட்டுப்பாட்டுடன் நிறைவேற்றியவர். நவீன கல்விச் சிந்தனையில் அடிநாதமாக விளங்கும் மகிழ்ச்சிகரமான கற்பித்தலின் மூலம் மாணவர்களின் நெஞ்சங்களில் நிறைந்திருப்பவர்.

கற்பித்தல் செயல் ஒழுங்கிற்கூடாகப் பல வெற்றிகளைப் பெற்றவர். ஆசிரியர் குழுமத்துடன் கல்லூரி முகாமைத்துவக் குழுமத்துடனும் இணங்கிச் செயற்பட்டு கல்லூரியின் சாதனைகளுக்குத் துணைபுரிகின்றவர். யார் மனதையும் நோகடிக்காமல் கல்விப்பணியாற்றிய நல்லாசான் இன்று ஓய்வுபெற்றுச் செல்வது எமது கல்லூரிக்குப் பேரிழப்பாக அமைந்த போதிலும் அவர் தனது ஓய்வுகாலத்திலே சகல சிறப்புக்களையும் பெற்று பெருவாழ்வு வாழ எமது கல்லூரியின் குலதெய்வமாகிய கிருபாகர சிவசுப்பிரமணியப் பெருமானைப் பிரார்த்தித்து வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

அ.அகிலதாஸ், அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி.



**திரு.வே.சிவகுருநாதன்**
B.A.Dip.In.Ed

பிறந்த திகதி: 16.01.1949
ஆரம்பக்கல்வி: கு/பொல்காவெல C.C.T.M.S
இடைநிலைக்கல்வி: யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி (தரம் 6-11)
யா /சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி (A/L)
உயர்கல்வி பேராதனைப் பல்கலைக்கழகம்
முதல் நியமனம் : 01.03.1973
ஓய்வுபெறும் திகதி: 15.01.2009

### சேவை விவரம்

யா/காரைநகர் யாழ்ரன் கல்லூரி
01.03.1972 - 14.03.1977
யா/பலாலி ஆசிரியர் கலாசாலை
15.03.1977-31.12.1978
ப/பசறை தமிழ் மகா வித்தியாலயம்
01.01.1979 - 14.06.1981
மன்/பேசாலை பத்திமா மகா வித்தியாலயம்
15.06.1981 - 05.07.1981
மன்/தலை மன்னார் பியர் G.I.M.S
06.07.1981 - 24.01.1984
மன் /உயிலங்குளம் R.C.T.M.S
25.01.1984 - 30.04.1986
யா/இடைக்காடு மகா வித்தியாலயம்
01.05.1986 - 31.07.2002
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
01.08.2002 15.01.2009

## அமைதியான பண்பும் கற்பித்தல் திறனும் கொண்ட ஆசிரியர்



ஆசிரியர் திரு.வேலுப்பிள்ளை சிவகுருநாதன் அவர்கள் தமது அறுபதாவது வயதில் ஆசிரியப் பணியில் இருந்து இளைப்பாறுகின்றார். நான் இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்த காலத்தில் 2002 ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்று வந்திருந்தார். இளமைத் தோற்றத்தையும் புன்சிரிப்பையும் கொண்டவர் மிகவும் அமைதியான சுபாவமுடைய இவர் தனது பணியில் விருப்பும், திறமையும் உடையவராக விளங்கினார். இவர் தமிழ், சமயம் ஆகிய பாடங்களை தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்குக் கற்பித்த நல்லாசிரியராகவும் இப்பாடங்கள் தொடர்பான போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தி, வெற்றிபெறச்செய்த திறமையும் உடையவர். இவர் தமது கற்பித்தல் பணிக்கு மேலாகப் பல்வேறு கடமைகளைப் பொறுப்பேற்றுத் திறம்பட நிறைவு செய்தவர். இவர் ஆற்றிய நற்பணியின் பேறாக மாணவர் சமுதாயத்தின் மத்தியில் நன்மதிப்பைப் பெற்று விளங்கியதுடன் சகல ஆசிரியர்களாலும் நன்கு விரும்பப்படுபவருமாவார். அவரது ஓய்வுகாலம் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

பொ.கமலநாதன்
முன்னாள் இளைப்பாறிய அதிபர் (கொ.இ.க)

## ஆசிரியர் திலகம்



திரு.வே.சிவகுருநாதன் அவர்கள் எமது பாடசாலையில் ஆறு வருடங்களாக தரம் 6 தொடக்கம் 11 வரை தமிழ், சமயம், தமிழ் இலக்கியம் போன்ற பாடங்களை மிகச்சிறப்பாகக் கற்பித்தார். அதிக விடுமுறை எடுக்காது சிறந்த முன்னாயத்தத்துடன் வகுப்புக்குச் சென்று சிறந்த முறையில் கல்வி கற்பிப்பதுடன் மாணவர்களின் பயிற்சிகளைத் தனது ஓய்வு நேரத்தில் திருத்தி, கற்பித்தலைச் சிறப்பாக பூரணப்படுத்தியவர். இதனால் வலயக்கண்காணிப்புக் குழுவால் மிகச் சிறந்த ஆசிரியர் எனப் பாராட்டப்பட்டவர். பாடசாலை நிர்வாகத்துக்கு பேருதவியாக இருந்தவர், பழகுவதற்கு இனியவர். சிரித்த முகம்கொண்ட இவர் மீது ஆசிரியர்கள் பெரும் மதிப்பு கொண்டிருந்தனர். இவரது ஓய்வுகாலம் சிறப்பாக அமைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

க.வேலாயுதம், பிரதி அதிபர் (கொக்குவில் இந்துக் கல்லூரி.)

## வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்



இளைப்பாறும் ஆசிரியர் திரு.வே.சிவகுருநாதன் எமது பாடசாலையில் சேவையாற்றி சிறந்த மாணவர்களை உருவாக்கியவர். குறிப்பாக தமிழ்ப் பாடத்தை சிறப்பாகப் போதித்தவர். செய்யும் தொழிலைத் தெய்வமாக மதித்தவர். இவரது ஓய்வுகாலம் வளமும் நலமும் ஓங்க ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியைப் பிரார்த்திக்கின்றேன். தொடர்ந்து எமது கல்லூரியுடன் உறவைப் பேணி உதவவேண்டும் என்பது எமது அவாவாகும்.

இ.செல்வநாதன், செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (கொ.இ.க)

## முன்னுதாரண புருஷர்



தனது ஆசிரியர் பணியில் இருந்து ஓய்வு பெறும் திரு.வே.சிவகுருநாதன் அவர்கள் 37 வருட ஆசிரியப் பணியில் இறுதி ஆறரை வருடங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் பணியாற்றியுள்ளார். தமிழ், சமயம் ஆகிய பாடங்களில் மாணவரைச் சிறப்பாகப் பயிற்றுவித்தவர். வகுப்பறைக் கற்றல் செயற்பாட்டிற்கு மேலாக மாணவர் மொழி ரீதியான சிறப்பு ஆளுமைகளைப் பெற அரும்பாடுபட்டவர். அவர் சேவையை நினைவில் கொள்ளுவோம். ஏனையோருக்கு முன்னுதாரணமாக இவ் ஆசிரியரின் ஓய்வுகாலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

சி.இராஜதுரை, தலைவர், பழைய மாணவர் சங்கம் (கொ.இ.க)

## கடமைக்கு இலக்கணமானவர்



நேர்மை, தெளிவு, புலமை ஆகியவற்றின் அணிகலனாக விளங்கியவர் திருவாளர் வே.சிவகுருநாதன் அவர்கள். ஆசிரியர்களுடன் அன்பாகவும், கருமங்களைத் திறம்படச் செயலாற்ற வைப்பதில் நல்லாசிரியராகவும் விளங்கியவர். மனோதிடம் செயற்திறன் இவற்றினூடாக வழங்கப்படுகின்ற பொறுப்புக்களை இலகுவாகவும், செம்மையாகவும் ஆற்றி எல்லோருடைய மனங்களிலும் இடம்பிடித்தார். அவரது ஓய்வுகாலம் மன மகிழ்வுடன் அமைய இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துக்களை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

க.மோகனதாஸ், பிரதி அதிபர் (கொ.இ.க)

## சிவகுருநாதன் எம் குருநாதன்



நிமிர்ந்த நடை, நேரிய பார்வை, அறுபது வயதிலும் இளமையின் துடிப்பு, பணிவான நன்னடத்தை, பண்போடு இயைந்த வாழ்வு, அளவான பேச்சு, அதிலும் ஒரு நகைச்சுவை, நம்கல்லூரி மாணவர் கற்றலில் உயர்த்திட ஆற்றிய சேவைகள் அளப்பரியன. அவரால் கல்லூரி உயர்ந்தது. கல்லூரியால் அவர் உயர்ந்தார். ஆசிரியர் குழாத்துடன் அன்புடன் பழகி ஒற்றுமை தளைத்திட ஓங்கியே உழைத்தவர். போற்றுகின்றோம் அவர் சேவையினை வாழ்த்துகின்றோம் வளமுடன் வாழ.

து.தர்மானந்தசிவம், தலைவர், ஆசிரியர் கழகம் (கொ.இ.க)

## அரச ஊழியர்களுக்கு கடன் வசதி

அரச ஊழியர் தமது அடிப்படைச் சம்பளத்தில் 10 மாதச் சம்பளத் தொகையைக் கடனாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இத் தொகை ரூபா இரண்டு லட்சத்து 50 ஆயிரத்துக்கு மேற்படக்கூடாது என வடமாகாணத் திறைசேரிச் சுற்றறிக்கை இல. PT/30/2008 மூலம் சகல நிறுவனத் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடு 2009 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அமுல் செய்யப்படுவதாக அச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (202-300)


## காணி விற்பனைக்கு

கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் 4 பக்கச் சுவர், பெரியகேற், குழாய்க்கிணறு என்பவற்றுடன் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
இல. 60, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 3898,
0776917030


## ஆண்டைந்தின் நினைவதனில்...



மலர்வு:
11.12.1974

உதிர்வு:
15.01.2004

அமரர்
பேரானந்தம்
உமாசுதன்
(போ்போசுதன்)

ஆண்டைந்து கடந்ததையா ஆனாலும் எம்
கண்ணினில் நீர் இன்னும் காயவில்லை
மீண்டும் நீர் வந்தாலே எம் துயர் ஆறிவிடும்
கனவாகிப் போன எம் கண்மணியே
உம்மை எம் கண்களில் ஏந்தி
வாழுகிறோம், வாடுகின்றோம்
உம்மை மறப்போமா எம் வாழ்வுதனில்
நாம் வாழும்வரை உம் நினைவுகள் வாழும்
என்றும் ஒளிர்கின்ற ஒளியாக

எம் நெஞ்சங்களில் நிலையாகிவிட்ட
உம் நினைவுகளோடு குடும்பத்தினர்.

காராளர் வளவு,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

## தவறிவிட்டது

218, மலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியுடைய செல்வி தர்ஷிகா பரமானந்தராஜா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.857722981V) இராணுவ அ.அ.(இல.0902037186) வேலை செய்யும் அலுவலக அட்டை என்பன 13.01.2009 செவ்வாய் கிழமை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.



**தேவை:** உணவு பரிமாறுபவர்கள் (சப்ளையேர்ஸ்), தேனீர் தயாரிப்பவர்கள் (ரீமேக்கர்), ஐஸ்கிறீம் தயாரிப்பவர்கள், சமையல்காரர்கள், சமையல் உதவியாளர், தேவைப்படுகின்றனர்.
தொடர்பு: "பழமுதிர்ச்சோலை"
624 A, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(நல்லூர் ஆலயம் முன்பாக)


## யாழ். மாவட்டத்திலுள்ள சகல வேலையற்ற பட்டதாரிகளுக்குமான பதிவுகள் மேற்கொள்ளுதலும் கலந்துரையாடலும்

எதிர்வரும் 17.01.2009 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவிருப்பதால் யாழ்.பெருமாள் கோயில் முன்றலில் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம். சமுகமளிப்போர் (Statement copy) கொண்டுவரும்படி கேட்டுக்கொள்வதுடன் ஏற்கனவே பதிவு செய்து வேலை கிடைக்காதவர்களையும் மீள்பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

[illegible]

## 11 ஆம் ஆண்டு நினைவு நாள்



மலர்வு நாள்:
01.06.1934

உதிர்வு நாள்:
18.12.1997

## அமரர் நல்லதம்பி வல்லிபுரம்

*B.Sc, M.Sc, SLEAS – II*
(ஓய்வுபெற்ற விரிவுரையாளர், ஆசிரியர் கலாசாலை)

**திதி : 15.01.2009 (மார்கழி தேய்பிறைப் பஞ்சமி)**

அன்புள்ள அப்பாவே! நீங்கள் எமை நீங்கி
ஆண்டுகள் பதினொன்று மறைந்து ஓடினவே,
இன்று உங்கள் நினைவுநாள்.
பாசமுடன் எமை ஈன்ற தந்தையே
ஆண்டுகள் பல ஆனாலும்
உங்கள் நினைவுடனேயே என்றும் எம் வாழ்வு.

*அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,*
*108, கலைமகள் வீதி,*
*கல்வியங்காடு, நல்லூர்.*
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் தரநிலை குறித்து நூல் வெளியிட ஏற்பாடு

அச்சுவேலி,ஜன.15

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் கல்வித்தரநிலை, கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள், அடைவு மட்டம், எதிர்கால வேலைத்திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கி தனித்தனியாக - பாடரீதியான கருத்துக்கள், முன்மொழிவுகளை உள்ளடக்கமாகக் கொண்டு ''யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் கல்விப்பயணம்'' என்னும் தொகுப்பு நூல்வடிவில் வெளியிடப்படவுள்ளது.

யாழ்.கல்விவலயப் பாடசாலைகளின் 'கல்விப்பயணம்' தொகுப்பு நூல் தொடர்பாக யாழ்.கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தகவல் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

யாழ்.கல்வி வலயத்தில் உள்ள ஒவ்வொரு பாடசாலையினதும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பாகவும் பாடரீதியாகக் கல்வி தரநிலை மேம்பாட்டிற்கான முன்மொழிவுகள் தொடர்பாகவும் கல்விப் பணிப்பாளர்கள், பாடத்துறைசார் உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் தனித்தனியாக பாடசாலைகளைத் தரிசித்து, சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் பணிநிலை தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கைப்படுத்தியுள்ளனர்.

குறிப்பிட்ட அறிக்கைகள் பாடசாலை அதிபர்கள் மற்றும் கல்விச் சமூகப் பிரமுகர்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்ட பின்பு குறித்த அறிக்கைகள் நூல்வடிவில் தொகுக்கப்பட்டு சகல பாடசாலைகளுக்கும் விநியோகிக்கப்படவுள்ளன.

சமகால பரீட்சை முடிவுகள், பாட அடைவு மட்டங்கள் சமூகத்தில் புரையோடிப்போய் உள்ள சில தவறுகளை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

தொலைக்காட்சிப் பொட்டிகளின் பாவனை அளவு, கையடக்கத் தொலைபேசி வசதி, ஆடம்பர வாழ்க்கை நிலை என்பன பொருளாதார ரீதியில் வசதி நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வியில் பாரிய பாதிப்புக்கள் ஏற்படுத்தியுள்ளன.

யாழ்.கல்வி வலயத்தின் அதிபர், ஆசிரியர்களின் தேவைகள் மற்றும் வசதி நிலைகள் கண்டறிப்பட்டு பெருமளவில் சீர் செய்யப்பட்டுள்ளன. இந்த வருடம் பாடசாலை மேற்பார்வை தொடர்பான செயற்பாடுகளில் கூடிய கவனம் செலுத்தப்படும். வலயமட்ட மேற்பார்வைக்குழு முன்கூட்டியே அறிவித்துவிட்டு பாடசாலைகளுக்கு விஜயம் செய்யும் அதே வேளையில் அறிவிக்காத நிலையிலும் பாடசாலைகளிற்கு விஜயம் செய்யும்.

வேலை நாள்களில் பிற்பகல் 2.30 மணிக்குப் பின்னர் அலுவலகத்தில் அவசிய தேவையின் நிமித்தம் பெற்றோர், நலன் விரும்பிகள் என்னைச் சந்திக்கலாம். தேவைகள், குறைபாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடலாம் - எனத் தெரிவித்தார். (202-11)

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் பண்ணிசை நிகழ்வு

வடமராட்சி, ஜன.15

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற் பகல் 10.30 மணிக்கு ''பண்ணிசை'' இடம்பெறும்.

பேரவைத் தலைவர் கே.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் நல்லை ஆதீன ஓதுவார் சி. தில்லைமணி பக்கவாத்தியங்கள் சகிதம் பண்ணிசை பாடுவார். (202-236)

# ஆன்மீகப் பேருரை

வடமராட்சி, ஜன.15

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்னும் தலைப்பில் ஆன்மீகப் பேருரை இடம்பெறும்.

மட்டக்களப்பு தபாலதிபர் பயிற்சிக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ரி.ரி.சண்முகநாதன் இப்பேருரையை நிகழ்த்துவார். (202-236)

# வைத்தியசாலைகளில் நோயாளிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன15

வைத்தியசாலைகளில் நோயாளிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சகல வைத்திய சாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், மாகாண, மாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் ஆகியோருக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் யு.ஏ.மெண்டிஸ் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்ததுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சகல தீமை விளைவிக்கக்கூடிய மருந்துகளும் அவை சார்ந்த பொருள்களும் பாதுகாப்பான இடத்தில் பூட்டி வைக்கப்பட வேண்டும்.

இப்பொருள்[illegible]உரிய பாதுகாப்பான இடத்தில் வைத்துப் பேணுவது அந்த வார்ட்டுக்குப் பொறுப்பான தாதி உத்தியோகத்தரது கடமையாகும்.

மதுபானப்பிரியர், போதைவஸ்துப் பாவனையாளர், மனநலன் குன்றிய நோயாளிகள் ஆகியோரை இனங்கண்டு அவர்களால் ஏனைய நோயாளிகளுக்குத் தீங்கு ஏற்படாத வகையில் அவர்களைப் பாதுகாப்பாக கண்காணித்து வரவேண்டும்.

தரையின் வழுக்கும் தன்மை, பாதுகாப்பற்ற சாளரம் இருப்பின் அவைகளால் நோயாளிகளுக்குத் தீங்கு ஏற்படாமல் இருக்க கவனம் எடுக்க வேண்டும்- என்றுள்ளது. (202-300)

# பிள்ளைகள் கல்வியில் முன்னேறுவதற்கு பெற்றோர்களின் பிரதான பங்கு தேவை

## இந்து ம.ஆ.பாடசாலை கால்கோள் விழாவில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.15

பலவிதமான கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்துவரும் குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் நன்கு படித்து முன்னேறுவதற்கு பெற்றோர்களே கூடிய கவனமெடுத்து பிரதான பங்கு வகிக்க வேண்டும்.

கடந்த திங்கட்கிழமை காலை யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்ற முதலாம்தர மாணவர்களுக்கான கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திருமதி தனரஞ்சனி துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கால்கோள் விழாவில் அவர் மேலும் பேசுகையில், கூறியவை வருமாறு:-

தீயால் அழியாத, வெள்ளத்தால் அழியாத, காலத்தால் அழிக்க முடியாத கல்விச் செல்வத்தைப் பெற்று வாழ்க்கையில் நல்லவளம் பெற்றுயர இன்று வந்து புதிதாகச் சேர்ந்திருக்கும் மழலைச் செல்வங்கள் எல்லோரையும் வாழ்த்துகின்றோம்.

உள்ளத்திலே கள்ளமற்ற இந்த இளம் பாலர்கள் படித்துப் பட்டம் பெற்றும் புகழுடன் வாழப் பெற்றோர் மிகுந்த கவனம் எடுக்க வேண்டும். இன்று பள்ளிக் கூடத்திலே சேர்த்தாயிற்று. இனி அவர்கள் பாடு; ஆசிரியர்கள் பாடு என்று விட்டு விடாமல் பெற்றோர்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். அப்போது தான் அவர்கள் முன்னேற்றப் பாதையில் செல்லமுடியும் - என்றார்.

பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (202)



கொழும்புத்துறை ஆனந்தன் வடலியில் யாழ்.மாநகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் நா.இரகுமார், குடும்ப நல உத்தியோகத்தர்கள், தொண்டர்களின் உதவியுடன் பொதுக் கிணறு ஒன்றுக்கு குளோறின் பேர்டுவதைப் படத்தில் காணலாம். (படம்:லக்ஸ்மன்)

# யாழ்.ப.நோ.கூ.சங்கம் எடுத்துவரும் மரக்கறிகளின் விலைகள் குறைப்பு

யாழ்ப்பாணம், ஜன15

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு விமானம் மூலம் கொண்டுவரப்பட்ட சகல மரக்கறி வகைகளின் விலைகள் குறைப்பு செய்யப்பட்டுள்ளதாகத் சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

கத்தரிக்காய், தக்காளிப்பழம், கரட், போன்றவற்றின் விலைகள் குறைக்கப்பட் டுள்ளன.

சந்தை விலைக்கேற்ப இப்பொருள்கள் விலை குறைக்கப்பட்டு சகல கிளை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

இதே சமயம், மற்றுமொரு மரக்கறித் தொகுதிகள் அதாவது பீற்றூட், பட்டர் போஞ்சி பே ான்றவை விமானம் மூலம் எடுத்துவரப்படவுள்ளது என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (202-224)

# சங்கானைப் பிரதேச வாழ்வாதாரத் திட்டங்களின் உபகரணக் கொள்வனவுக்கு நிதி

யாழ்ப்பாணம், ஜன.15

வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனம் சங்கானைப் பிரதேசத்தை இலக்காகக் கொண்டு செயற்படுத்திவரும் வாழ்வாதார செயற்திட்டங்களை வினைத்திறமையாக்கும் நோக்குடன் உபகரணக் கொள்வனவிற்காக யாழ்.மாவட்ட செயலகத்தினால் ரூபா 5 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேலைகளுக்குப் பயன்படுத்துவதற்கு ஓட்டோ, மோட்டார் சைக்கிள், அலுவலக பயன்பாட்டுக்கு கணனி ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்கும், திட்ட செயற்பாடுகளிற்கு பயன்படுத்த அவர்களால் உபயோகிக்கப்படும் லான்ட் மாஸ்டருக்கான பெட்டி கொள்வனவு செய்யவும் இந்நிதி பயன்படுத்தப்பட உள்ளது எனவும் யாழ்.மாவட்ட செயலகம் தெரிவித்தது. (202-300)

# இனப்படுகொலைப் போரை நிறுத்த ஒபாமா அரசு காத்திரமான நடவடிக்கை எடுக்குமென்று நம்புகின்றோம்

## 'ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு' மனு

கொழும்பு, ஜன.15

இனப்படுகொலைப் போரை நிறுத்துவதற்கு ஒபாமா அரசு உடனடியாகக் காத்திரமான நட்வடிக்கையை எடுக்குமென்றும் தமிழர்களுக்கு நல்லவழி ஏற்படுத்தும் என்றும் நம்புகின்றோம் என்று அமெரிக்காவில் இயங்கும் 'ஒபாமாவுக்கான தமிழர்கள்' (Tamils for obama) என்ற அமைப்பு தனது மனுவில் தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்வாகியுள்ள பராக் ஒபாமாவுக்கும் அமெரிக்க வெளியுறவுச் செயலராக நியமனம் பெறுகின்ற திருமதி ஹிலாரி கிளிண்டனுக்கும் மேற்படி அமைப்பு மனு ஒன்றை அனுப்புவதற்கான கையெழுத்து வேட்டையில் தற்போது இறங்கியுள்ளது. இது தொடர்பான விவரங்களில் சில நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தன.

தமிழர்கள் சார்பில் அனுப்பப்படவுள்ள அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள முழு விவரமும் வருமாறு:

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அவர்களே மற்றும் அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் ஹிலாரி கிளிண்டன் அவர்களே!

இக்கடிதத்தில் கையொப்பம் இட்டிருக்கும் நாங்கள் இலங்கையில் நடக்கும் போரைமுடிவுக்குக்கொண்டுவரஉடனடியாக தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பணிவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

ஏனெனில்,

* இந்தப் போரானது தமிழர்களின் பூர்வீக நிலமான இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகள் மீது இலங்கை அரசால் மேற்கொள்ளப்படுகின்றது. பெரும் அழிப்பை ஏற்படுத்தி, தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தில் இருந்து அவர்களை அகற்றி இனச் சுத்திகரிப்புச் செய்வதே இந்தப் போரின் நோக்கமாகும். முதலாம் நூற்றாண்டுக் காலத்தில் றோமன் இராச்சியத்தில் பலஸ்தீனத்திலிருந்து யூதர்களைத் துரத்தியது போன்ற பெரும் மக்கள் இடப்பெயர்வு அங்கு இப்போது நிகழ்கின்றது.

* ஆங்கிலேயரிடம் இருந்து இலங்கை சுதந்திரமடைந்த 1948 இலேயே இந்த தமிழின அழிப்பு ஆரம்பிக்கப்பட்டு விட்டது. தமிழர் நிலங்களைப் பறித்து, அவற்றுக்கு சிங்களப் பெயர்களைச் சூட்டி அவற்றில் சிங்களக் குற்றவாளிகளைக் குடியேற்றி, அவற்றில் இராணுவ முகாம்களை நிறுவுதல் என இந்த இனச் சுத்திகரிப்பு ஆரம்பித்தது. தொடர்ந்து, தமிழர்களுக்கு கல்வி மறுக்கப்பட்டு, வேலைவாய்ப்பு மறுக்கப்பட்டு, தமிழர்களின் பொருளாதார வாழ்வு சீரழிக்கப்பட்டது. மேலும், கடந்த 25 வருட காலமாக தமிழர் படுகொலைகளும், கைதுகளும், காணாமல்போதலும் மட்டுமன்றி தமிழர் வாழ்விடங்கள் மீது வான், தரை மற்றும் கடல் வழியான தொடர்ச்சியான குண்டுவீச்சுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

* இலங்கை அரசு புத்த மதத்தை நாட்டின் அரச மதமாக்கி, இந்து மற்றும் கிறிஸ்தவ ஆலயங்களைக் குண்டு வீசி அழித்துவிட்டு பின்னர் அந்த இடங்களில் புத்த விகாரைகளைக் கட்டுகின்றது.

* அனைத்து சமாதான முயற்சிகளையும் நிராகரித்து, சமரச உடன்பாடுகளையும் கிழித்தெறிந்த இலங்கை அரசுகள் இப்படியான முயற்சிகளுக்குத் தொடர்ந்து முட்டுக்கட்டைகளையும் போடுகின்றன.

* தமிழ் மக்களுக்கு அனைத்துலக தொண்டு நிறுவனங்கள் வழங்கி வந்த அனைத்து உதவிகளையும் நிறுத்தியதோடு, இலங்கை அரசு அந்த நிறுவனங்களை நாட்டை விட்டும் துரத்தியது. சில சந்தர்ப்பங்களில் அவர்களைக் கொலைகளும் செய்துள்ளது.

இந்நிலையில், இந்த இனப்படுகொலைப் போரை நிறுத்துவதற்கு, ஒபாமா அரசு உடனடியாக காத்திரமான நடவடிக்கையை எடுக்குமென்றும் தமிழர்களுக்கு நல்ல வழி ஏற்படுத்தும் என்றும் நாங்கள் நம்புகின்றோம்.

எங்களது இந்த விண்ணப்பத்திற்கு மதிப்பளித்தமைக்கு எமது நன்றிகளும் [illegible]ித்தாகட்டும்.

[illegible] என்றுள்ளது. (சி)

# வலிகாமம் கிழக்கில் பரவுகிறது பாதீனியம்

யாழ்ப்பாணம், ஜன.15

வலி.கிழக்குப் பிரதேசத்தில் பாதீனியச் செடிகள் பெருமளவு அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாதீனியச் செடிகளைப் பூண்டோடு அழிப்பதற்கு எவரும் இதுவரை நடவடிக்கை எடுக்காதது குறித்தும் கவலை தெரிவித்துள்ளனர்.

வீதியோரங்கள், தோட்ட நிலங்கள் மற்றும் பொது இடங்கள் என்பவற்றில் இந்தப் பாதீனியக் களைகள் அண்மையில் பெய்த மழையை அடுத்து பரவி வளர்ந்து காணப்படு கின்றன.

தோட்டங்களிலும் பாதீனியச் செடிகள் வளர்ந்திருப்பதால் மரக்கறிப் பயிர்களும் இதனால் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு.பரமேஸ்வரன் சுஜிவன்
**B.Sc (Surveying Science)**

ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த பரமேஸ்வரன் சுஜிவன் அவர்கள் (15.01.2009) கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும். பட்டமளிப்பு விழாவில் B.Sc (Surveying Science) பட்டம் பெறுவதையிட்டு அவரை மனமார வாழ்த்துவதோடு, அவர் மேலும் இத்துறையில் உயர்ந்து விளங்கிட எல்லாம் வல்ல கற்பக விநாயகர் அருள்புரிவாராக.

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (81799)

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அண்ணாமார்
அக்கா, உறவினர்கள், நண்பர்கள்.

# மனம் நிறைந்த நன்றிகளை வெளிப்படுத்துகின்றோம்



இலங்கையில் முதன்முதலாக 1925 ஆம் ஆண்டு உருவான யாழ்ப்பாணத்திலிருக்கும் ஆயுள் வேதக் கல்லூரியான லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியும் அதனை நிருவகிக்கும் வட இலங்கை சுதேச மருத்துவ சபையும் பல்வேறு துன்பங்களைச் சுமந்துவரும் நிலையில் அவற்றினை முற்றாகத் தீர்த்து வைக்கும் முகமாக மிக நீண்ட காலத்தின் பின்னர் பொதுச் சபையை 11.01.2009 அன்று கூட வைத்து அதன்மூலம் புதிய இயக்குநர் சபையைத் தெரிவு செய்து அது செயற்பட நிதி இல்லை என்று கூறியவுடன் அன்றைய தினமே ரூபா 1,00,000 நிதியை பொருளாளரிடம் கையளித்த எமது மேன்மை தங்கிய சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ உயர்திரு. கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு மனம்நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.


நிரந்தரக் காணி, கட்டடம் அற்ற நிலையிலிருந்த எமது கல்லூரிக்கு சுன்னாகத்தில் 10 பரப்பு அரச காணியை ஒதுக்கித் தந்ததுடன் அதில் கட்டடம் கட்ட நிதியுதவி செய்வதாகவும் கல்லூரியில் கற்று வெளியேறும் வைத்தியர்களை அரச சேவைகளில் இணைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுத்தருவதாகவும் உறுதியளித்த எமது மாண்புமிகு அமைச்சருக்கும் அவரது கட்சியினருக்கும் இக்கல்லூரியில் கற்ற, கற்றுக் கொண்டிருக்கும் வைத்திய சமூகத்தினரும், சபையினரும் நன்றிக்கடன் பெற்றிருக்கின்றோம் என்பதை வெளிப்படுத்தி அவர்கள் நீடுழிவாழ வாழ்த்தி மீண்டும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

லங்கா சித்த ஆயுள்வேத வைத்தியக் கல்லூரிச் சமூகத்தினர்,
வட இலங்கை சுதேச மருத்துவ சபை.

(81797)

# மரண அறிவித்தல்

## இரத்தினம் யசோதரன்



நயினாதீவு, 8ஆம் வட்டாரத… பிடமாகவும் அமெரிக்காவை வசி… மாகக் கொண்டவருமான இரத்… யசோதரன் அவர்கள் அகாலமரணமானா…

அன்னார் திரு.திருமதி இரத்தினம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி இராசசேகரம்-யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பிரபாலினியின் அன்புக் கணவரும், யதுசனின் அன்புத் தந்தையும், லீலாதேவி (இலங்கை), குகனேஸ்வரன் (இலங்கை), காலஞ்சென்ற தவேஸ்வரன், தவமணி தேவி (கனடா), லலிதாதேவி (பிரான்ஸ்), தியாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் கனகலிங்கம் (லண்டன்), கனேந்திரா (பிரான்ஸ்), பிரேமாவதி (இலங்கை), சுதர்சினி (லண்டன்), பாமினி (கனடா), சபேசன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவநேசனின் (கனடா) அன்புச் சகலனும், தயானந்தா, ஹேமலதா, சத்யவாணி, சிந்துயா, மாயன், கலை, சாருயன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிசாந்தினி, உசாந்தினி ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.01.2009) வெள்ளிக்கிழமை மாலை 4 மணிமுதல் 9.30 மணிவரை 3280 Sheppard Ave. East இல் அமைந்துள்ள Highland Funeral Home இல் பார்வைக்கு வைக்கப்பட்டுப் பின்னர் 17.01.2009 சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் 10 மணி வரை ஈமைக்கிரியைகள் நடைபெற்று Parliament வீதியில் உள்ள St. James மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

8ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (சி/55662)

தகவல்:
தங்கை ச.இரத்தினம்.

# சுன்னாகத்தில் விபத்து: வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம், ஜன.15

சுன்னாகம் பிரதான வீதியில் இடம் பெற்ற சைக்கிள் - மோட்டார் சைக்கிள் விபத்தில் வயோதிபர் ஒருவர் மரணமானார்.

உடுவில், டச்சு வீதியைச் சேர்ந்த அரியரட்ணம் பாலச்சந்திரன் (வயது 70) என்னும் ஓய்வுபெற்ற எழுதுவினைஞரே இந்த விபத்தில் பலியாகியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த நபர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(202)

## இலட்சார்ச்சனை

சுழிபுரம், ஜன.15

சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் ஏக தின இலட்சார்ச்சனை இன்று வியாழக்கிழமை காலை ஆரம்பமாகி மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது. இன்றைய தினம் விசேட அபிஷேகம் இடம்பெற்று அதன் பின் அனைவரும் சங்கற்பம் செய்து இலட்சார்ச்சனை நடைபெறவுள்ளது.

(201)

## தாச்சிப் போட்டி

இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்திவரும் தாச்சி சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள போட்டியில் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மானிப்பாய் யுவசக்தி விளையாட்டுக் கழகம் மோதும்.

(50-86)

## குருநகர் பிரதேசத்தில் வடிகால்கள் …க்கப்படவில்லை

…நகர் பகுதி …வடிகால்கள் துப்…வு செய்யப்…ட்டு இரண்டு வாரங்களைத் தாண்டி விட்டது. இ…னால் தேங்கியுள்ள கழிவு நீரால் பிரதேசத்தில் துர்நாற்றம் வீசி வருகிறது.

வடிகால்களில் குப்பைகளுடன் மண்ணும் நிரம்பி நீரோட்டம் தடைப்பட்டுக் கிடக்கிறது.

மவுண்கார்மேல் வீதி, கடற்கரை வீதி மற்றும் அடம்பன் வீதியின் 1ஆம், 2ஆம், 3ஆம் குறுக்கு வீதிகள் கொண்டடி, ஓடக்கரை வீதிகளிலுள்ள வடிகால்களிலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் சுற்றாடல் மாசடைவதுடன் நுளம்பு போன்ற நோய்க்கிருமிகளின் …றது.

(202-160)

### யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை

# பதவி வெற்றிடம்

பதவி : தற்காலிக காவலாளி

தகைமை : கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத்திட்ட பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால அனுபவம். அல்லது எட்டாம் வகுப்பு சித்தியுடன் விண்ணப்பதாரி நல்ல தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

வயதெல்லை: 25 -45

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் *"செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டடத் தொகுதி இரண்டாம் மாடி, யாழ்ப்பாணம்"* என்னும் முகவரிக்கு 25.01.2009 இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

செயலாளர்,
யாழ்ப்பாணம் மாவட்டக்
கூட்டுறவுச்சபை.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நடராசா சிவஞானம்



இல.111, பருத்தித்துறை வீதி, நல்லூரைச் சேர்ந்த திருமதி நடராசா சிவஞானம் நேற்று முன்தினம் (13.01.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் நடராசாவின் அன்பு மனைவியும், இந்திராகாந்தி (லண்டன்), விமலகாந்தி (ஆசிரியை, புனித றோக்ஸ் றோ.க. வித்தியாலம்), நீதிராஜா (லண்டன்), தருமராஜா (லண்டன்), ஆனந்தராஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் Dr.இராசையா (லண்டன்), அற்புதச்சந்திரன் (விவசாய போதனாசிரியர், விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி), பாரதி (லண்டன்), சுஜாதா (லண்டன்), ஹேமா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் ரஜிந்தன், ஜனார்த்தனன், லக்ஸ்சனா, அபூர்வா, காயத்திரன், அஜித்தா, சுஜந்தா, சுஜந்தன், நிஷா, நிஷாகரி, கீதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (15.01.2009) மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.111, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (சி/556655)

தகவல்:
பொ.அற்புதச்சந்திரன்
(மருமகன்).

## சரவணை செல்லத்துரை (துரைராசா)



நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும், தற்போது மன்னாரில் வசித்தவருமான சரவணை செல்லத்துரை நேற்று (14.01.2009) புதன்கிழமை மன்னாரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை - வேலாசி தம்பதியினரின் அன்பு மகனும், சின்னத்துரை, காலஞ்சென்ற இலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், மாக்கிரேற்றின் அன்புக் கணவரும், கிறேஸ் சுசீலா, ஜோர்ஜ் எட்வேட், டானியல் றூபராஜன், றெக்ஸ் (பழைய மாணவன், மெமோறியல்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2009) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு மன்னாரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P 0232250214
0714323638 (81800)

தகவல்:
க.திருநாவுக்கரசு
(பெறாமகன்)

## தனபாலன் எட்வேட் துரைசிங்கம் (தனம்)



வல்வெட்டித்துறை, நெடியகாட்டைச் சொந்த இடமாகவும் பிரான்சில் வசித்து வந்தவருமான தனபாலன் எட்வேட் துரைசிங்கம் (தனம்) 12.01.2009 பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சட்டத்தரணி இக்னேசியஸ் துரைசிங்கம்-மாகிரட் துரைசிங்கம் தம்பதியினரின் புதல்வரும், நளினியின் அன்புக் கணவரும் ஜெயபாலன் (ஜெயம்), குணபாலன் (குணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிதி, கிருபா ஆகியோரின் மைத்துனரும், அருட்தந்தை லூயிஸ் பொன்னையா அடிகளாரின் மருமகனும், அருட் சகோதரி லைசா, அருட்சகோதரி திரேஸ் கிறேஸ், அருட் சகோதரி மரியறெஜீனா ஆகியோரின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.
T.P 0774134042 (81804)

தகவல்:
J.A.துரைசிங்கம் (ஜெயம்)
(சகோதரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று ஈழத் தமிழர் பிரச்சினையில் ராஜீவ் காந்தி இலங்கை அழைக்காமல் தலையிடவில்லையா?

ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்திய மத்திய, மாநில அரசுகளின் மெத்தனப் போக்கையும், போலிக் குற்றச்சாட்டுக்களைக் கூறி மக்களை ஏமாற்றுவதையும் விமர்சித்து "மக்களை ஏமாற்ற மக்களே தரும் அதிகாரம்" என்ற தலைப்பில் தமிழக நாளேடான தினமணியில் கட்டுரை ஒன்று வெளியானது. அது இங்கு மீள் பிரசுரமாகிறது.

"இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்ப நாங்கள் தயாராகவே உள்ளோம். இன்னொருவர் வீட்டுக்கு விருந்தாளியாகச் செல்ல, நாம் விரும்பினால் போதுமா? நம்மை வரவேற்க அவர்கள் தயாராக இருக்க வேண்டாமா?" என்று மத்திய அரசின் கப்பல் துறை அமைச்சர் டி.ஆர். பாலு திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

## இந்தியாவின் ஆயுதங்கள் ஈழமக்களை வேட்டையாடுகின்றன

நாள், கிழமை, சாங்கியமெல்லாம் பார்த்துப் போவதற்கு, பிரணாப் முகர்ஜி என்ன இலங்கைக்குப் பொங்கல் சீர் கொடுப்பதற்காகவா போகவிருந்தார்? அப்பாவி ஈழத் தமிழ் மக்களை எல்லாம் அழித்து முடித்து விட்டு, இலங்கை அரசு, நாள், நட்சத்திரம் பார்த்து அழைப்பு விடுக்கும். அதன் பிறகு பிரணாப் முகர்ஜி பேனாலென்ன? போகா விட்டாலென்ன?

வெறி கொண்ட ஒரு வீட்டுக்காரன் தன்



மக்களை எல் லாம் அடித்து நொறுக்கிக் கொண் டிருக்கிறான். ஏன் என்று கேட்பது எல்லோருடைய கடமையுந்தானே. அவன் 'வாருங்கள்; வாருங்கள்' என்று என்னை அழைக்காத காரணத்தால், நான் அந்த வீட்டுக்குள் சென்று அநியாயத்தைத் தடுக்க முடியவில்லை. ஆனா லும் நான் அவனுடைய அழைப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்வது எத்தகையதோ, அத்தகையதுதான், இது ஜெயவர்த்தன ஆட்சிக் காலத்தில் ராஜீவ் காந்தி பசித்திருந்த ஈழ மக்களுக்கு ரொட்டிப் பொட்டலங்களை வீசுவதற்காக, இலங்கை எல்லைக்குள் அத்துமீறி இந்திய விமானங்க ளைப் பறக்கச் செய்தார்.

## ஈழத் தமிழ் மக்கள் காக்கப்படவேண்டும் என்பதில் தமிழக மக்களிடம் இரண்டு கருத்துக்கள் இல்லை

இலங்கையின் இறையாண்மை பாதிக்கப்பட்டு விட்டது என ஜெயவர்த்தன தொண்டை நரம்பு புடைக்கக் கத்திய போது, "உஸ்... வாயை மூடு; இல்லாவிட்டால் இலங்கையே இல்லாமல் போய் விடும்' என்று வாயால் சொல்லவில்லையே தவிர மற்றபடி ஜெயவர்த்தனவை இழுத்து வைத்து ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்கி, ஈழத்தின் வடக்கு, கிழக்குப் பகுதிகளை இணைத்து அதை ஒரு மாநிலமாக்கி, அதற்கு ஒத்துழைக்க விடுதலைப் புலிகள் தயாராக இல்லை என்னும் நிலையில், அந்த மாநிலத்திற்கு வரதராசப்பெருமாளை முதலமைச்சராக்கினாரே ராஜீவ் காந்தி. அது அதிகாரத்தில் குறைவான ஈழம் என்றாலும், இதையெல்லாம் ஜெயவர்த்தன அழைப்பு விடுத்துத்தான் ராஜீவ் காந்தி செய்தாரா என்பதற்கு டி.ஆர். பாலு பதில் சொல்லட்டுமே.

ஏதோ எகிப்தில் அடிமைகளாயிருந்த யூதர்களை மோசே விடுவித்துக் கூட்டிச் சென்றதைப்போல், பிரணாப் முகர்ஜி ஈழத் தமிழ் மக்களை விடுவித்துக் கூட்டிவரப் போகிறாரா? மோசேக்கு நிகராக முகர்ஜியின் இலங்கைப் பயணத்தை பாலுவின் மூலம் தூக்கி நிறுத்தும் முதல்வர் கருணாநிதிதான் சொல்லட்டுமே!

கிளிநொச்சிக்குள் சிங்கள இராணுவம் நுழைந்தபோது, அந்த நகரம் பேயறைந்த நகரம்போல் ஆளரவமே இல்லாமல் காணப்பட்டதே; அங்கிருந்த தமிழ் மக்களெல்லாம் எங்கே போனார்கள்? வீடு வாசல், சொத்து சுகம் அனைத்தையும் விட்டுவிட்டு, கட்டிய வேட்டி சேலைகளோடு, கைப்பிள்ளைகளையும் தூக்கிக் கொண்டு, தாங்கள் பிறந்து வளர்ந்த தாய் மண்ணைவிட்டு அவர்கள் எங்கே போவார்கள்?

சிங்கள விமானங்கள் தேடித் தேடிக் குண்டு வீசுகிறது! இந்தியாவிடமிருந்து பெற்றுள்ள நவீன ஆயுதங்கள் கடைசியில் ஈழ மக்களை வேட்டையாடத்தானே பயன்படுகின்றன.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளை ஆத ரிப்பதில் இரண்டு கருத்துகள் உண்டு. ஆனால் ஈழத் தமிழ் மக்கள் காக்

## தமிழ் நாட்டில் கருணாநிதியின் சப்பாணி அரசு காங்கிரஸ் கட்சியின் தயவிலேயே மூச்சு விடுகிறது

கப்பட வேண்டும் என்பதில் இரண்டு கருத்துகளில்லை.

விடுதலைப் புலிகளை மட்டுமில்லை; அவர்களை ஆதரிப்போருடன்கூட உடன்படாதவர் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா.

ஆனால் போர் நிறுத்தப்பட வேண்டும்; அப் பாவித் தமிழ் மக்கள் காக்கப்பட வேண்டும் என்பதில் மட்டுமல்ல; ஈழத் தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமையை வழங்குவதன் மூலம்தான் இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காண முடியுமேயன்றி, இராணுவ ரீதியாக அல்ல என்னும் நிலைப்பாட்டிலும் உறுதியானவர் அவர்.

அதற்கு நேர்மாறாக ஈழம்தான் தீர்வு; விடுத லைப் புலிகளின் மூலம்தான் அது நடந்தேற முடியும் என்று உறுதியாக நம்புகிறவர்களும் இருக்கிறார்கள். நெடுமாறன், ராமதாஸ், வைகோ போன்றோர் அத்தகைய நிலைப்பாடு உடையவர்கள்.

இதில் முதலமைச்சர் கருணாநிதி என்ன நிலைப்பாடுடையவர்? விடுதலைப் புலிகளின் ஆதரவாளரா? எதிர்ப்பாளரா? தமிழ் ஈழக் கொள்கையாளரா? சுயாட்சிக் கொள்கையாளரா? யாருக்குத் தெரியும்? இருப்பினும் சிங்கள இராணுவத்தின் எல்லை மீறிய அட்டூழியங்களால் அப்பாவித் தமிழர்கள் அழிகிறார்கள் என்றவுடன் ஓர் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார். இதில் பேசாமல் இருந்து விட்டால், தலைமை கைமாறி விடும் என்று அவருக்குத் தெரியும்.

கொஞ்சமா அனுபவங்கள்? "இரண்டு வார காலத்திற்குள் இந்திய அரசு குறுக்கிட்டு, இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படும்படி செய்ய வில்லை என்றால் தமிழ் நாட்டிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனை வரும் ராஜிநாமா செய்வார்கள்" என்றொரு "வீரத்" தீர்மானத்தைக் கருணாநிதி முன்மொழிய, வந்திருந்த பிற கட்சிகள் அவரை நம்பி, அந்தத் தீர்மானத்தை வழிமொழிந்தன.

மக்களிடமிருந்து பெற்ற அதிகாரத்தை மக்களுக்காகப் பயன்படுத்துவது - தேவையானால் பதவிகளைத் துறந்தும் மக்களைக் காப்பது - மீண்டும் அதே மக்களிடம் பதவிகளைப் பெறுவது என்பதுதான் நாணயமான தலை வர்களின் அரசியல் போக்கு. ஆனால் கருணாநிதி நாணயம்போல் காட்டிக் கொள்கின்ற தலைவர். அதுதான் எல்லாக் குளறுபடிகளுக்கும் காரணம்.

இரண்டு வாரக்கெடு விதிக்கப்பட்ட ராஜிநாமா நாடகத்திற்கு ஒரு விறு விறுப்பை உருவாக்கத் தன் மகளி டமிருந்து ராஜிநாமாக் கடிதத்தை முதலில் பெற்றார். பிறகு அடுத்தடுத்து மற்ற தி.மு.க. உறுப்பினர்களும் அவ்வாறே செய் தனர். எல்லா ராஜிநாமா கடிதங்களையும் அறிவாலயத்திலேயே வைத்துக் கொண்டார்.

கருணாநிதியின் முழுவளர்ச்சி பெறாத சப்பாணிப்பிள்ளை போன்ற சிறுபான்மை அரசு முழுக்க முழுக்கக் காங்கிரஸின் தயவிலேதான் தமிழ்நாட்டில் மூச்சே விட்டுக் கொண்டிருக்கிறது! ராஜிநாமா நாடகத்தை அளவோடு நிறுத்திக் கொள்ளாவிட்டால், கருணாநிதி மத்திய அரசை மட்டும் இழக்கமாட்டார்; மாநில அரசையும் சேர்த்துத் தொலைத்து விட நேரிடும்.

"வெறுங்கரண்டி வைத்திருப்பவன் ஆட்டி ஆட்டிப் பேசுவான்; எண்ணெய்க் கரண்டி வைத்திருப்பவன் அப்படிச் செய்ய முடியுமா" என்பது கருணாநிதி அடிக்கடி சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்.

தன்னுடைய முகத்தைத் தொலைத்துவிட்டுத் தவித்துக் கொண்டிருக்கும் இந்தத் தரு ணத்தில் கருணாநிதி வீட்டுக்குப் பிரணாப் முகர்ஜி வந்தார். "போர் நிறுத்தம் செய் என்று இலங்கையை நாம் எப்படிக் கேட்க முடியும்?" என்று கருணாநிதியின் தொலைந்துபோன முகத்தை மீட்டு, அதில் கரியைப் பூசி விட்டுப் போனார் முகர்ஜி.

கொஞ்சமும் வெட்கமில்லாமல் கரியைத் துடைத்துவிட்டு, மத்திய அரசின் நடவடிக்கை நமக்கு ஆறுதல் தருகிறது என்று கூறி, எம்.பிக்களின் ராஜிநாமா கடிதங்களைக் குப்பைத் தொட்டியில் வீசி எறிந்து விட்டு, மத்திய அரசுக்கு தான் நெருக்கடியை ஏற்படுத்த விரும்ப வில்லை என்றார் கருணாநிதி.

மன்மோகன் அரசு கருணாநிதியின் தயவில் நடக்கும்போது, தமிழர்களின் நன்மையில் கருத்துச் செலுத்தாவிட்டால், டில்லி அரசு கவிழ்ந்துவிடுமே என்று மன்மோகன் சிங் அல்லவா கவலைப்பட வேண்டும்? கருணாநிதி உறுதியாக நின்றால் தமிழர்கள் தொடர்புடைய மத்திய அரசின் அயல் நாட்டுக் கொள்கை ஓரிரவில் மாறி விடாதா? ராமதாஸ் மட்டும் தொடர்ந்து கருணாநிதியை நெருக்கிக் கொண்டிருந்தார். ராமதாஸின் மகன் அன்புமணியும் அவருடைய கட்சியின்ரும் ஈழத் தமிழ் மக்களுக்காகப் பத வியை ராஜிநாமா செய்ய வேண்டியதுதானே என்று திருப்பி அடித்தார் கருணாநிதி. இதில் எல்லாம் கருணாநிதி கில்லாடி. அத்தோடு ராமதாஸின் வீராவேசம் அடங்கிவிட்டது.

ராஜிநாமா நாடகத்தை ஒருவழியாக முடித் துவிட்டு சட்டப்பேரவையில் போர் நிறுத்தம் கோரித் தீர்மானம் போடுவதற்கு அனைத்துக் கட்சிகளும் முன்வர



வேண்டும் என்று கருணாநிதி அழைத்தார். அ.இ.அ.தி. மு.க., வலது, இடது பொது வுடை மைக் கட்சிகளின் ஒத்துழைப்போடு ஒரு ம்னதாகத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

எதிர்க்கட்சிகள் ஒத்துழைத்து என்ன பயன்? ஆள்கிறவர்கள், மன்மோகனும், கருணாநிதியும்தானே! இலங்கைக்கு ஆயுதங்கள் கொடுப்பதையே நிறுத்தாத மத்திய அரசு போரை எப்படி நிறுத்தும்? 'போரை எப்படி நிறுத்த முடியும்' என்று கருணாநிதி வீட்டுக்கே வந்து கேட்டுவிட்டுப் போன பிறகும், மத்திய அமைச்சர் டி.ஆர் பாலு, 'பிரணாப் முகர்ஜி நிச்சயமாக இலங்கை செல்வார், ஆனால் எப்போது என்றுதான் சொல்ல முடியாது' என்று சொல்லிக் கொண்டிருப்பதில் என்ன பொருளிருக்கிறது?

புரிந்துதான் பேசுகிறாரா? கருணாநிதி வீட்டுக்கு வந்து சொல்லியதை, ராஜபக்ஷ வீட்டுக்கும் சென்று சொல்லி விட்டு வந்துவிட வேண்டும் என்று பிரணாப் முகர்ஜிக்கு ஏதாவது நேர்த்திக் கடன் இருக்கிறதா? மக்களை ஏமாற்ற மக்களே பதவி தருவது மக்களாட்சி முறை ஒன்றிலே தான். ஒரே ஒரு நிபந்தனை, எந்த ஏமாற்று தலையும் 'மக்களுக்காகத்தான்' என்று சொல்லிவிட்டுச் செய்ய வேண்டும்.

## பலியானோரில் 40 வீதம் குழந்தைகளும் பெண்களுமே!

டெல் அவிவ், ஜன. 15

"காஸாவில் இஸ்ரேல் மேற்கொண்டுள்ள தாக்குதல்களுக்கு இதுவரை பலியானோரில் நாற்பது சத வீதத்துக்கு மேற்பட்டோர் பெண்களும் பிள்ளைகளுமாவர். இத் தாக்குதல்களால், காஸாவிலுள்ள முழுக் குழந்தைகள் சமுதாயமும்,உணர்வுபூர்வமாகவும், உளரீதியாகவும் மீள முடியாத பெரும் பாதிப்புக்குள்ளாகலாம்" என குழந்தைகள் உரிமைகளுக்கான ஐ.நா. குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

"குழந்தைகள் நடமாடும் இடங்கள் மீது, மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்குக் கடும் கண்டனம் தெரிவிக்கும் ஐ.நா. உடன்படிக்கையில், இஸ்ரேலிய அரசும் கைச்சாத்திட்டுள்ளது. எனினும், அதன் தாக்குதல்களுக்குப் பெருந் தொகையான குழந்தைகளும் பலியாகியுள்ளார்கள்" என்றும் இக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

"இத்தாக்குதல்களால், 90,000இக்கு மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறியுள்ளார்கள். இவர்கள் அனைவரும் வாழ்வாதாரங்கள் இன்றி சொல்லொண்ணா அவதிக் குள்ளாகி வருகிறார்கள். குழந்தைகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள்" என பலஸ்தீன மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது.

"செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற தாக்குதல்களில் மாத்திரம் நாற்பதுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இஸ்ரேல் இராணுவத்தால் தாக்குதல்கள் நடத்தப்பட்ட அநேக பகுதிகளுக்கு அவசரகால சேவையாளர்களால் செல்ல முடியவில்லை. எச்சமயத்திலும் மீள தாக்குதல்கள் நடத்தப்படலாமென்ற அச்சம் நிலவுகிறது" என பலஸ்தீன மருத்துவ வட்டார அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

"டிசெம்பர் 27ஆம் திகதி, இஸ்ரேல் தாக்குதல்களை ஆரம்பித்தது. அது முதல் இதுவரை காஸாவில், 971 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 311 குழந்தைகளும், 76 பெண்களும் அடங்குவர். 4,400இக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்" என்றும் இந்த அதிகாரிகள் விவரித்துள்ளார்கள்.

# 19ஆவது நாளாகவும் காஸாவில் மோதல் எகிறுகிறது உயிரிழப்பு; ஜனாதிபதி கவலை

மேற்குக் கரை, ஜன. 15

"இஸ்ரேல் எங்கள் மக்களை அழித்தொழிக்க முற்பட்டுள்ளது. அதன் தாக்குதல்களில் குழந்தைகள் உட்பட அப்பாவி மக்கள் பலியாகி வருகிறார்கள்" என பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

"எங்கள் மக்களுக்கு எதிரான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு 19 ஆவது நாளாக தொடர்கிறது. ஒவ்வொரு நாளும் அதன் தாக்குதல்கள் மென்மேலும் முனைப்படைந்தே வருகின்றன. உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது" என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"எங்கள் மக்களை துடைத்தெறிய வேண்டும் என இஸ்ரேல் கங்கணம் கட்டிக் கொண்டு, இன அழிப்பில் ஈடுபட்டுள்ளது. ஐ.நாவின் கோரிக்கையையும், சர்வதேச வேண்டுகோளையும் அது உதாசீனப்படுத்திவிட்டது. போர் வெறியில் இஸ்ரேல் நேரிய சிந்தனையை இழந்து வருகிறது" என்றும் அப்பாஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

"இஸ்ரேலின் மிலேச்சத்தனமான குண்டுவீச்சுகளுக்கு அஞ்சி, 90,000இக்கு மேற்பட்ட பலஸ்தீனர்கள் தம் வீடுகளைக் கைவிட்டு அகதிகளாக வெளியேறியுள்ளார்கள். இவர்களில் ஏறத்தாழ 31,000 பேர் காஸா நகரில் ஐ.நா. நடத்தும் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளார்கள்" என மனித உரிமைகளுக்கான பலஸ்தீனக் குழுவினரின் அல்-மி ஜான் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

"இந்த பாடசாலைகளில் மிக நெருக்கடிகளுக்கு மத்தியில் அகதிகள் நிரம்பிவழிகிறார்கள். ஜாபாலியா, ஷட்டி அகதி முகாம்களில் அகதிகள் இடநெருக்கடிகளுக்கு மத்தியில் பரிதவிக்கிறார்கள். மற்றும் 60,000 பேர் அயற்புறங்களிலும், அயற்புற உறவினர்களின் இல்லங்களிலும் புகலிடம் பெற்றுள்ளார்கள்" என்றும் இந்த மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழுத் தலைவர் ஜேகப் கெலின் பேகர் காஸாவில் தலையெடுத்துள்ள மனித அவலத்தை நேரில் அவதானித்தார். இதன்பின்னர் அவர் காஸாவிலுள்ள கேந்திர மருத்துவ்மனைக்கு விஜயம் செய்தார்.

அவர் மருத்துவமனை வட்டார அதிகாரிகள் மத்தியில் பேசுகையில், "இந்த மருத்துவமனையைப் பார்வையிட்டேன். குண்டுத் தாக்குதல்களில் காயமுற்றோரையும், அவயவங்களை இழந்தோரையும், உயிருக்காக போராடிக்கொண்டிருப்போரையும் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். விவரிக்க முடியாத அவல நிலையானது மனதை கௌவியுள்ள வேதனையால் என்னால் மேலும் பேச முடியவில்லை" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பல் சேவை இன்று இடம்பெறாது

யாழ்ப்பாணம், ஜன.15

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறாது என்று யாழ். அரச அதிபர் கே.கணேஷ் நேற்றிரவு தெரிவித்தார்.

காலநிலை சீரில்லாத காரணத்தால் இச் சேவை ரத்துச்செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 42 புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஈடுபடுவர். இது, இலவச சுகாதார சேவை உரிய முறையில் வடக்கு கிழக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்படுவதற்கான முதல் நடவடிக்கை. இந்த வைத்தி அதிகாரிகளுக்கு உரிய பாதுகாப்பும் வழங்கப்படும் - என்றார்.

## சுண்டிக்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சு கூறியிருக்கின்றது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தர்மபுரம் பகுதியின் எல்லைப் பகுதியை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர் என்றும், இந்தப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சண்டைகளின் பின்னர் விடுதலைப் புலிகளின் 3 சடங்களை படையினர் கைப்பற்றியிருக்கின்றனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருக்கின்றது.

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை அறிவித்தார்.

இலங்கையில் உடனடியாகப் போரை நிறுத்துமாறு இலங்கை அரசுக்கு இந்திய மத்திய மற்றும் தமிழக அரசுகள் கோர வேண்டும் என்றகோரிக்கையை முன் வைத்து இந்தப் போராட்டத்தை தாம் ஆரம் பிப்பதாக திருமாவளவன் கூறினார்.

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள தமிழக அரசின் விருந்தினர் விடுதிக்கு முன்பாக - எம். ஏ. சிதம்பரம் ஸ்ரேடியத்துக்கு வெளியே - அமைக்கப்படுகின்ற உண்ணாவிரத மேடையில் இன்று காலை 9.00 மணிக்கு உண்ணாவிரத போராட்டத்தை அவர் ஆரம்பிக்கிறார்.

'இனவெறிப் போரை நிறுத்து!', 'அமைதிப் பேச்சை நடத்து!!' ஆகிய இரு கோரிக்கைகளையும் இந்திய மத்திய அரசிடம் முன் வைத்து - அதற்கு தமிழக அரசும் உண்மையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி - இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை திருமாவளவன் நடத்துகிறார் என விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு அறிவித்தது.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்துக்கான ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல்களில் திருமாவளவனும் அவரது கட்சியினரும் நேற்றுமாலை ஈடுபட்டி ருந்தனர்.

## உலகத் தமிழினம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெகுண்டெழுந்து இந்த அழுத்தத்தை இந்திய மத்திய அரசுக்குக் கொடுக்கவேண்டும். அதற்கான இறுதித் தருணம் இதுதான்.

உலகத் தமிழினத்தை தட்டி எழுப்பி, வெகுண்டெழச்செய்யும் உணர்வு நிலையை ஏற்படுத்தவே இந்த உண்ணா நிலைப் போராட்டத்தில் குதிக்க முடி வெடுத்தேன்.

தங்களது உரிமைகளை வேண்டி கடந்த இரண்டரை தசாப்தங்களாக ஈழத் தமிழர்கள் நடத்தும் போராட்டமும் அவர்களும் அழிக்கப்பட்டு விடவோ, ஒழிக்கப்பட்டு விடவோ நாம் அனுமதிக்க முடியாது. அந்த இழிகொலையை நாம் பார்த்து வாளா விருக்கக்கூடாது.

ஈழத்தமிழர்களின் நலனுக்காக குரல் கொடுங்கள் என்று தமிழகத்தில் உள்ள தரப்புகள் எல்லாம் சேர்ந்து அழுத்தம் கொடுத்து, பல போராட்டங்களை நடத்தி, தமிழகத்தின் ஒட்டு மொத்தக் கருத்தை வெளிப்படுத்தியும் இந்திய மத்திய அரசு அசைந்து கொடுப்பதாக இல்லை. தமிழகத்தினதும் உலகத் தமிழர்களினதும் உணர்வுகளுக்கு மத்திய அரசு மதிப்புக் கொடுப்பதாக இல்லை.

**மத்திய அரசை அசையச் செய்ய வேண்டும்**

இந்திய மத்திய அரசு அமைதி காக்கின்றது அல்லது ஈழத்தமிழர்களுக்கு எதிராக நடந்து கொள்கின்றது என்பதற்காக நாம் சும்மா இருந்து விட முடியாது.

தமிழக மக்களும் புலம்பெயர்வாழ் தமிழர்களும் ஒரணியில் ஒன்றுபட்டு எழுந்து ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்து மத்திய அரசை அசையச் செய்ய வேண்டும்.

அதற்காக எல்லா இடங்களிலும் ஈழத் தமிழர்களுக்காக குரல் எழுப்பும் ஜனநாயகப் போராட்டங்கள் மக்கள் பேரெழுச்சியாக வெடித்து வெளிப்பட வேண்டும்.

நாம் எல்லாத் தரப்புகளும் ஒன்றிணைந்து உலகளாவிய ரீதியில் பெரிய அளவில் அழுத்தம் கொடுத்தால்தான் இந்திய மத்திய அரசு அசைந்து கொடுக்கும். அப்போதுதான் ஈழத் தமிழினம், இலங்கையின் சிங்கள அரசின் பேரழிவு ஆக்கிரமிப்பில் இருந்தும், அழித்தொழிப்பு நிலையிலிருந்தும் தப்பிப் பிழைக்க வாய்ப்புக் கிட்டும்.

அந்த நோக்கிலேயே இந்தப் போராட்டத்தில் குதித்திருக்கிறேன் - என்றார் திருமாவளவன்.

## இந்தியாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைவிடாத பீரங்கித்தாக்குதலையும், விமானக் குண்டுவீச்சையும் அங்கு நடத்துகிறது. அப்பாவித் தமிழர்கள், பெண்கள், குழந்தைகள், வயதானோர், நோயாளிகள் இராணுவக் குண்டுவீச்சில் மடிகின்றனர். உணவும், மருந்தும் இன்றி சாகின்றனர்.

மிகுந்த வருத்தத்தோடு இந்தியாவின் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசை நான் குற்றம் சாட்டுகிறேன். இந்திய அரசு திட்டமிட்டு தொடர்ந்து சிங்கள அரசின் இராணுவத் தாக்குதலுக்கு முழு அளவில் உதவி செய்து வருகிறது. ஸ்ரீலங்கா விமானப் படைக்கு ராடர்களைத் தந்தது. ஸ்ரீலங்கா இராணுவத் தினருக்கு இந்தியாவில் பயிற்சி அளித்தது. இந்திய இராணுவ, விமானப்படை நிபுணர்களை இலங்கைக்கு அனுப்பி இராணுவ நடவடிக்கைகளுக்கு உதவியது.

**ஈழத்து வயல்வெளிகளில் தமிழரின் இரத்த வெள்ளம்**

தமிழ் மக்களை குண்டு வீசிக்கொன்று குவிக்கும் சிங்கள விமானப்படை, விமானங்கள் பயன்படுத்தும் பலாலி வான்படைத் தளத்தை இந்திய அரசின் செலவில் பழுது பார்த்துக் கொடுத்தது. இலங்கைக்கு வட்டியில்லா கடனாக ஆயிரம் கோடி ரூபாயும் கொடுத்தது. அந்தப் பணத்தைதக் கொண்டு ஸ்ரீலங்கா, பாகிஸ்தான், சீனாவிடம் இருந்து ஆயுதங்கள் வாங்க உதவியது. பசுமை நிறைந்த ஈழத்து வயல்வெளிகளில் தமிழர்களின் இரத்தம் வெள்ளமாக பாய்கிறது.

இலங்கையில் சிங்கள அரசு யுத்த நிறுத்தம், செய்வதற்கான நடவடிக்கை களை இந்திய அரசு மேற்கொள்ளவேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டும், தமிழகத்தின் அரசியல் கட்சிகள் கலைத்துறையினர், இலக்கியத்துறையினர் ஊர்வலங்கள், அறப் போராட்டங்கள், மனித சங்கிலிகள் நடத்தியும் இந்திய அரசு அவற்றை அவமதித்து அலட்சியம் செய்தது.

**வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் இந்திய அரசு**

மாறாக வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் ஸ்ரீலங்காவுக்கு தொடர்ந்து இராணுவ ரீதியான உதவிகளை செய்து வருகிறது. உலகம் எங்கும் உள்ள தமிழர்களின் சார்பில் உங்களை கரம் கூப்பி, மன்றாடி வேண்டுகிறேன். முல்லைதீவில் மரணத்தின் கோரப்பிடியில் சிக்கியிருக்கும் ஆறு லட்சம் ஈழத்தமிழர்களின் உயிர்காக்க நடவடிக்கை எடுங்கள்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் உதவியால் ராஜபக்ஷ அரசு நடத்தும் தமிழினக் கொலையைத் தடுத்து நிறுத்துங்கள். இந்த நியாயமான கோரிக்கையை நீங்கள் நிராகரித்தால் தமிழர்களும், எங்கள் சந்ததிகளும் இந்திய அரசின் இந்த வஞ்சகமான துரோகத்தை எந்நாளும் மன்னிக்க மாட்டார்கள்- என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் மிக முக்கியமான கால கட்டத்தில் மட்டுமல்ல முக்கியமான இடத்தை சுற்றி வளைத்து நின்று கொண் டிருக்கினர். படையினரின் பிடியிலிருந்து பயங்கரவாதிகள் தப்பிவிட முடியாது.

பயங்கரவாதிகளுக்கு எதிரான படையினரின் தாக்குதல்கள் பல முனைகளிலும் முன்னெடுக்கப்படுகின்றன. பயங்கரவாதிகளின் பலம் குறுகியகாலத்துக்குள் இல்லாமல் போகலாம். படையினரால் முன்னெ டுக்கப்படும் அந்த நடவடிக்கையின் இறுதி அறிவிப்பை மக்கள் அவசர செய்தி களின் (எஸ்.எம்.எஸ்) மூலம் விரைவில் அறிந்து கொள்ள முடியும் - என்றார். (1)

## புதுக்குடியிருப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று இணையத்தளங்கள் நேற்றுச் செய்தி வெளியிட்டிருந்தன.

படுகாயமடைந்தவர்கள் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குச் கொண்டு செல்லப்பட்டனர்.

மற்றைய பகுதிகளில் இருந்து புதுக்குடியிருப்புப் பகுதியை நோக்கி இடம்பெயர்ந்தவர்களே இப்பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகினர்.

எஸ்.மஞ்சுளா (வயது - 28), கே.லக்ஷிகா (வயது - 31), கே. மோககுமார் (வயது - 33), ஞானம் (வயது - 34), எஸ்.றொக்ஷன் (வயது - 34), எஸ் சிவஞானம் (வயது - 39), எஸ். அருள்வரதன் (வயது - 40), எல்.அமரேசன் (வயது - 42), ரி.தங்கச் செல்வன் (வயது - 42), ரி.நாகரட்ணம் (வயது - 46), எஸ். தவமலர் (வயது - 57), கே.எலிசபெத் (வயது - 63) ஆகியோரே படுகாயமடைந்தனர் என்று இணையத்தள செய்திகள் விவரங்களைவெளியிட்டுள்ளன.

## பயங்கரவாதத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தளபதியின் யுத்த வியூகமும், ஜனாதிபதியின் அரசியல் தலைமைத்துவமுமே காரணங்களாகும்.

எவ்வளவுதான் ஆயுதங்கள் இருந்தாலும், படையினரின் தியாகமும், வீரமும் இல்லை என்றால் யுத்தத்தில் வெற்றி பெறமுடியாது.

அதேபோல் இராணுவத்தளபதியின் யுத்த வியூகங்கள் மிக முக்கிமானவையாகும். அவரின் வியூகத்திற்கு புலிகளால் முகம் கொடுக்க முடியவில்லை.

மூன்று வருடகால யுத்தத்தில் மூவாயிரத்து 703 பேர் முப்படையினரிலும், பொலிஸாரிலும் மரணமடைந்துள்ளனர். இந்த உயிர்களை இழந்து நாம் மாபெரும் யுத்த வெற்றியைப் பெற்றுள்ளோம்.

அதேபோல் ஜனாதிபதியின் அரசியல் தலைமைத்துவம் இந்த யுத்தவெற்றிக்கு மற்றுமொரு காரணமாகும்.

**சர்வதேச நாடுகள் யுத்தம் செய்ய வேண்டாம் என்றன**

புலிகளுடன் யுத்தம் செய்யவேண்டாம் என்று சர்வதேச நாடுகள் பல, ஜனாதிபதிக்கு அழுத்தம்கொடுத்தன. புலிகள் மீது கை வைத்து அவர்களைத் தோற்கடிக்க முடியாது என்றும் புலிகள் 30 வருட காலமாகமுள்ள பலமான ஒரு அமைப்பு என்றும் அந்த சர்வதேச நாடுகள் கூறின.

அது மாத்திரமன்று பொருளாதார ரீதியாகவும் எமக்கு சர்வதேச அழுத்தம் வந்தது. சில நாடுகள் யுத்தம் செய்ய எமக்கு ஆயுதங்களை வழங்க மறுத்தன.

இந்த நிலையிலும்கூட பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற ஒரே நோக்கில் ஜனாதிபதி முன்வைத்த காலை பின் வைக்கவில்லை.

**சீனாவும் பாகிஸ்தானும் எங்களுக்கு ஆயுதங்களைத் தந்தன**

ஆயுதங்களைப் பெறுவதற்காக ஜனாதிபதி சீனத் தலைவருடன் நான்கு தடவைகளும் பாகிஸ்தான் தலைவருடன் எட்டுத் தடைவைகளும் தொலைபேசியில் பேசி ஆயுதங்களை பெற்றார்.

ஜனாதிபதியின் இந்தத் திறமை - தலைமைத்துவம் இப்போதைய யுத்த வெற்றிக்கு முக்கிய காரணமாகும். அரசின் தலைமைத்துவம் சரியாக அமையாவிட்டால் யுத்தத்தில் நிச்சயம் வெற்றிபெறமுடியாது.

சர்வதேசத்தின் பாரிய அழுத்தத்திற்கு மத்தியில் எம்மால் இந்த யுத்தத்தை வெல்ல முடியும் என்றால் ஏனைய விடயங்களை வெற்றிபெறுவது மிக மிக இலவானது.

தரைப்படையினர் தந்த ஒத்துழைப்பைப் போல் கடற்படை மற்றும் விமானப்படையும் நல்ல ஒத்துழைப்பை வழங்கின.

கடற்படையினர் புலிகளின் ஆயுதக் கப்பல்களையும், சிறிய தற்கொலைப் படகுகளையும் அழித்தொழித்த அதேவேளை விமானப்படையினரும், புலிகளின் இலக்குகள் மீது சரியானமுறையில் தாக்குதல் நடத்தினர்.

அதேபோல் படையினரின் எண்ணிக்கைகளையும் எம்மால் அதிகரிக்க முடிந்தது. கடந்த மூன்று வருடத்திற்குள் மாதம் 5 ஆயிரம் பேர் என்ற அடிப்படையில் முப்படையினரதும் பொலிஸாரினதும் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. அவ்வாறு 40 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வெற்றியை எம்மால் பெறமுடியும் என்றால் ஏன் இதற்கு முன்பு நாட்டை ஆண்டவர்களால் பெறமுடியாமல் போயிற்று என்று எனக்கு விளங்கவில்லை.

இறுதிவரை பயங்கரவாதத்தை ஒழித்தல் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளதோடு, படையினருக்கும் இந்த நோக்கத்தின் முக்கியத்துவத்தை விளக்கிக் கூறியுள்ளோம்.

இந்த நிலையில் புலிகளின் தலைவர் பிரபாகரன் நிச்சயம் நாட்டைவிட்டுத் தப்பியோடி பயங்கரவாதச் செயற்பாட்டை முன்னெடுக்கவே முற்படுவார். அவர் சைனைட் அருந்தி தற்கொலை செய்யமாட்டார் என்று நான் நம்புகிறேன்.

தமிழ்த் தலைவர்களையும் ஏனைய தமிழ் அமைப்புகளையும் அழித்த பிரபாகரனைப் பிடிப்பது மிக முக்கியம். மீண்டும் ஒரு பிரபாகரன் உருவாகாதவாறு இந்த யுத்தம் இறுதி வரை முன்னெடுக்கப்படும்.

குறுகிய காலத்திற்குள் பிரபாகரனைப் பிடித்துவிடமுடியும்.

**புலி ஆதரவாளர்களின் தேவை**

மீண்டும் புலிகள் வெகுண்டெழ வேண்டும் என்பதே புலிகளினதும் புலி ஆதரவாளர்களினதும் தேவை.

ஆனால், புலிகளை மீண்டும் தலைதூக்க நாம் விடமாட்டோம்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகாமல் வேறு எவராவது ஜனாதிபதியாகியிருந்தால் இப்போது நாடு இரண்டாகப் பிரிந்திருக்கும்

யுத்த நிறுத்தம் காரணமாகவே கருணா பிரிந்து வந்தார் என்றும், அதனாலேயே புலிகள் பலமிழந்தனர் என்றும் சொல்வதை என்னால் ஏற்கமுடியாது.

அப்படியென்றால் அப்போதைய அரசியல் தலைவர் ஏன் அவரைப் பயன்படுத்தி புலிகளைத் தோற்கடிக்கவில்லை?

**புலிகள் தலைவர்கள் சரண் அடைந்தாலும் மன்னிப்புக்கிடையாது; தண்டனையே**

யுத்த நிறுத்த காலத்தில்தான் புலிகள் அதிக ஆயுதங்களை வங்கிக் குவித்தனர். இதைக் கருணாவும் கூறியுள்ளார். நாம் கிழக்கை மீட்டதைத் தொடர்ந்து அங்கு கைப்பற்றிய ஆயுதங்கள் அனைத்தும் புலிகள் யுத்த நிறுத்த காலத்தில் வாங்கியவைதான்.

யுத்த வெற்றியைத் தொடர்ந்து சர்வதேச நாடுகளினாலும் எதிர்க்கட்சி உறுப்பினர்களினாலும் கருத்துகள் மாறிவருகின்றன. யுத்தத்திற்கு ஆதரவாகவே இப்போது கருத்துக்கள் நிலவுகின்றன.

புலிகள் அமைப்பின் சாதாரண உறுப்பினர்கள் ஆயுதங்களைக் கீழேவைத்துச் சரணடைந்தால் அவர்களுக்கு நாம் புனர்வாழ்வு அளிப்போம்.

ஆனால், புலிகளின் தலைவர்கள் சரணடைந்தாலும் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும். மன்னிப்புக் கிடையவே கிடையாது. அவர்கள் மக்களுக்கு அதிக தொல்லையைக் கொடுத்தவர்கள்.

பிரபாகரனைப் பிடித்தால் அவரை இந்தியாவிடம் ஒப்படைப்பது தொடர்பில் ஜனாதிபதி அரசியல் ரீதியாக முடிவெடுப்பார்.

ஆனால், முதலில் நாம் அவரைத் தண்டிக்க வேண்டும். அதன் பிறகே வேறு நாட்டுக்கு கொடுக்கவேண்டும். இதுதான் எனது கருத்து- என்று கூறினார். (அ-சி)

கற்சுமி வெளியீடு
கற்சுமி வெளியீடுகளை புதிதாகப் பெற விரும்பும் பாடசாலைகள் தொடர்பு கொள்க பெற்றோர்/ மாணவர்கள் பதிவு செய்யுங்கள்.
நாவலர் வீதி, யாழ்.

A/L DAY CLASS
இந்து நாகரிகம்
S.ஜெயக்குமார்
B.A (Hons)
ஆரம்பம்:
16.01.2009
Fri 10 am
NEC
Clock Tower Road, Jaffna

நெல்லியான் பெரியதம்பிரான் ஆலய
அதிஷ்ட லாபச்சீட்டின் அதிஷ்ட இலக்கங்கள்
1ஆம் பரிசு: 2834 2ஆம் பரிசு: 4690 3ஆம் பரிசு: 3984
ஆறுதல் பரிசுகள்
1) 5026 2) 3232 3) 3273
4) 2604 5) 2784 6) 2681
7) 2397 8) 2643 9) 0081
10) 3424
பரிசில்களை சுழிபுரம் தெற்கு பெரியதம்பிரான் ஆலய பரிபாலன சபையிடம் 31.01.2009 இற்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும்.
குறிப்பு: மேற்குறிப்பிட்ட தினத்திற்குப் பின்னர் இப்பரிசில்கள் வழங்கப்படாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.
நிர்வாகம்

Arts Academy
நல்ல விளக்கம்
நல்ல Notes
நல்ல Tudes
நல்ல Results
நல்ல Teachers
நமது Tution
கஸ்தூரியார், நவாலர் முகப்பில்

Sky Computer Pvt Ltd
No, 05 Devos Avenue, Colombo - 04, Tel:- 0115 - 335261 Fax:- 0115 - 371229
No, 162, Main Street, Jaffna. Tel:- 021-4590325
Affiliated With Irish International University (U.K)
Course Details
Diploma In Ms Office - 2 Months
Diploma In DTP - 2 Months
Diploma In Hardware - 2 Months
Diploma In Web Design - 3 Months
Diploma In Computerized Accounting - 3 Months
Internet & Email - 2 Weeks
Today You Learn Tomorrow You Lead.

Accounting
P.பகீரதன்
A/L DAY CLASS
(Mon, Tue, Wed, Thu - 8 - 10 am)
நடைபெறுகின்றன
PAPER CLASS
(Fri - 10 - 12 am, Sat, Sun - 3 - 4 pm)
ஆரம்பம்
16.01.2009
Fri 10 am
NEC
Clock Tower Road, Jaffna

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் ... வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org